முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 23–11–56 வெள்ளி | ஒலி 34

"டெல்லியில் நேரு முன்பாகவும், ஐ. நா. கலாச்சார மாநாட்டுப் பிரதிநிதிகள் முன்பாகவும் தமிழ் நாட்டுக் கலை நிகழ்ச்சியான காவடியாட்டம் நடைபெற்றது." (செய்தி)

கூடாது, இந்தக் 'கூடா நட்பு'!

அபலை யொருத்தி; முரடன் ஒருவனால் மானபங்கம் செய்யப்படுகிறாள்; கற்பழிக்கவும் படுகிறாள்.

ஆனால் சட்டம் அவனைத் தண்டிக்க முன்வருகிறது; இது போன்ற குற்றங்களை நாட்டில் பரவவிடாமலும் தடுக்க முயல்கிறது.

ஆனால் அகில உலக அரசியலில் இதுபோன்றதொரு அநியாயத்தைச் செய்துவரும் ஏகாதிபத்திய நாடுகளோ தண்டனை ஏதுமில்லாமல் தப்பித்துக்கொள்வதற்கு முயல்கின்றன!

எகிப்து — அபலை யொருத்தி நிலையிலேயிருக்கும் சின்னஞ் சிறு நாடு! அந்த நாட்டிலேதான் தங்கள் மிருகச் செயல்களைப் புரிந்து காட்டினர், பிரிட்டன்; பிரான்ஸ் என்னும் நாட்டின் காட்டுமிராண்டி மனம் படைத்தத் தலைவர்கள்!

மானபங்கம் செய்வது; கற்பழிப்பது—கடுந் தண்டனை வாங்கித் தரக்கூடிய குற்றங்கள், சமுதாயத்திலே!

ஆனால் அரசியலிலேயோ இந்தக் காரியத்தைப் பெரிய ஏகாதிபத்தியங்கள் செய்தால் அதற்குப் பரிகாரம் ஒன்றுமில்லை— என்ற நிலைமை உருவாகும் போல் தெரிகிறது.

அபிசீனியாவின் மீது படையெடுத்த முசோலினி—

போலந்தின்மீது தாக்குதல் நடத்திய இட்லர்—

இவர்களது புத்திகெட்ட செயலுக்கு எந்த விதத்திலும் தாழ்ந்ததல்ல ஈடனும்; மோலட்டும் செய்திருக்கும் கொடுமைகள்!

—அந்தக் கொடுமைகளுக்கான தண்டனையை அவர்கள் அனுபவிக்க வேண்டாமா?

எகிப்து எனும் எழில் மிகு அணங்கின் கரம்பற்றி இழுத்து; காலித்தனம் நடத்திய போலி வேஷதாரிகளுக்குத் தக்கதோர் பாடம் கற்பிக்கப்பட வேண்டாமா?

தன்மான உணர்ச்சிகொண்டவர்கள் அனைவரும்; இந்த உபகண்டம் முழுவதிலிருந்தும் 'வேண்டும்; வேண்டும்!' என்று முழக்க மிடுகின்றனர்.

ஆனால் பண்டிதரோ வழக்கம் போல, "பதட்டம் வேண்டாம்!" — என்று உபதேசித்துக்கொண்டேயிருக்கிறார்.

ஆசியாவின ஜோதி!

சீனா போக ஆசியாவின் மீதி!

ஆசிய எழுச்சியின் உருவகம்!

—இப்படியெல்லாம் குரல் கொடுக்கப்படுகிறது, அவரைப் பற்றி!

இந்தோ சைனாவிற்குச் சுதந்தரம் வழங்க வேண்டுமென்று டில்லியிலே மாநாடு கூட்டித் தீர்மானம் போட்டு ஏகாதிபத்தியக் கூடாரத்தைத் திணறடித்தவர்;

சீனாவிற்கு ஐ.நா.விலே அங்கீகாரம் வேண்டுமென்று அறை கூவல் விடுத்தவர்;

—என்றெல்லாம் கூறுகிறார்கள், அவரைப்பற்றி!

அவர்தான் இப்போது ஆசியாவோடு சகோதர நிலையிலே இருக்கும் ஆப்பிரிக்க நாட்டிலே ஆபத்து அரும்பிவிட்ட இந்த நேரத்தில் வெறும் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி வைப்பது ஒன்றினாலேயே தனது பணி முடிந்துவிட்டதெனக் கருதுகிறார்!

மூன்று நண்பர்கள்! அவர்களிலே ஒருவன் இரண்டாமவனுக்குத் தீங்கு புரிந்துவிடுகிறான்.

நேர்மையிலும், நீதியிலும், அதே நேரத்தில் உண்மையான நட்பிலும் நாட்டம் கொண்டிருக்கும் மூன்றாமவன் என்ன செய்ய வேண்டும்?

அநியாயம் செய்த அந்த நண்பனை அழைத்து; 'நீ செய்வது தவறு; அதை மேற்கொண்டும் செய்யாதே. செய்த வரைக்கும் அவனிடம் மன்னிப்புப் பெறு'—என்று எடுத்துச் சொல்ல வேண்டும்; அவனது பொருளொன்றை அபகரித்திருந்தால் அதைத் திரும்பக் கொடுத்துவிடு — என்று வற்புறுத்த வேண்டும்.

அவன் அதைக் கேட்காவிடில் அந்த 'நல்லவன்' செய்ய வேண்டியது என்ன?

கேட்க மறுத்த பிறகும் அந்தீயவனோடு நட்பு வைத்துக் கொண்டிருப்பது சாலச் சிறந்ததாகக் கருத முடியுமா?

முடியாது; அந்த நிலைமை ஏற்பட்டால் கூடா நட்பு அது—என்று அவன் நட்பை முறித்துக் கொள்வதுதான் அறிவுடைய சொல்!

இதே போன்றதுதான் இப்போது நடந்திருப்பதும்!

எகிப்திற்குத் தீங்கு செய்திருக்கிறது, பிரிட்டன்!

அதை நல்லது என்றும் சாதிக்க முயல்கிறார், அந்த நாட்டின் பிரதமர், ஈடன்!

—இதற்குப் பிறகும் 'காமன்வெல்த்' என்ற தொடர்பை இந்த உபகண்டம் ஏன் பிரிட்டனுடன் வைத்துக்கொண்டிருக்க வேண்டும்?

'கூடா நட்பு' வேண்டாம் என்று பிரிட்டனுடன் ராஜிய உறவுகள் அனைத்தையும் முறித்துக் கொள்ளும்படிக் கூறவில்லை, நாம்; அதை எகிப்தின் நலனில் அதிக அக்கரை கொண்ட அரபு நாடுகள் சில செய்திருக்கின்றன!

ஆசிய எழுச்சியின் வித்து; காலனி நாடுகளின் விடுதலைக்கு ஒரு முன்னோடும் பிள்ளை; அந்தப் பண்டிதர்தான் இப்போது காமன்வெல்த் அமைப்பிற்கு வக்காலத்து வாங்கும் பிற்போக்காளரின் வரிசைக்குத் தலைமை வகித்து வருகிறார்.

அப்படித்தான் என்ன; காமன்வெல்த் தொடர்பு இந்த உபகண்டத்திற்கு அபரிமிதமான நன்மைகளைச் செய்து தருகின்றதா?

அதுவும் இல்லை!

✻✻ இந்தியா அங்கம் வகிக்கும் காமன்வெல்த்தில் தான் இலங்கையும், தென் ஆப்பிரிக்காவும், ஆஸ்திரேலியாவும் அங்கம் வகிக்கின்றன!

ஆனால் காமன்வெல்த் மூலம் இந்தியா, பண்டாரநாயகாவிடம் இலங்கைத் தமிழர் அவதி குறித்துப் பேச முடிகிறதா?

அல்லது தென் ஆப்பிரிக்காவில் நடக்கும் நிறவெறித் தாண்டவத்திற்குப் பரிகாரம் தேட முடிகிறதா?

அல்லது ஆஸ்திரேலியாவில் தான் எந்த இந்திய உபகண்டத்துப் பிரஜையும் குடியேறுவதற்கான உரிமையைப் பெற முடிகிறதா?

எதுவுமில்லை.

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு; தென் ஆப்பிரிக்கா கொடுமைகளை நிவர்த்திப்பதற்கு — இவை எல்லாவற்றிற்குமே ஐ. நா. சபைக்குத்தான் செல்லவேண்டியிருக்கிறது!

சரி; நன்மைதான் தினைத்துணையும் கிடையாது—தீமைகளாவது இல்லாமலிருக்கிறதா?

அதுவும் இல்லை.

✻✻ காமன்வெல்த் உறவு இருப்பதால் இந்தியா போய் ஸ்டர்லிங்கு நாணயத்துடன் தொடர்புகொள்ள வேண்டியிருக்கிறது.

அதனால் இந்திய உபகண்டம் தனது தேவையைப் பிரிட்டனிடமிருந்தே பெறவேண்டிய அவசியம்—மறைமுகமான வற்புறுத்தல்—ஏற்படுகிறது!

இந்த ஒரே காரணத்திற்காக உலகத்தின் வேறு மூலைகளிலேயெல்லாம் விலை குறைவாகக் கிடைக்கும் பொருள்களை இந்திய உபகண்டம் சற்று அதிகவிலை கொடுத்து பிரிட்டனிடமிருந்து பெறவேண்டியிருக்கிறது!

அவ்வளவுதானா? இதனால் இந்திய உபகண்டத்தின் முந்தைய செய்கையையே இது அவமதிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

✻✻ இந்திய உபகண்டத்திற்கும் தென் ஆப்பிரிக்காவிற்கும் இப்போது எந்தவித ராஜியத் தொடர்பும் கிடையாது.

சுருங்கச் சொன்னால் இரு நாடுகளுக்கும் இடையே இருந்த ஏற்றுமதி இறக்குமதிப்

✻ 10–ம் பக்கம் பார்க்க

நீங்கள் வாக்காளர் ஆகிவிட்டீர்களா?

வாக்காளர் ஆகுவது எப்படி? வாக்காளர் பட்டியலில் தன் பெயர் பதிவாகாதிருந்தால் மேற்கொண்டு செய்யவேண்டியது என்ன?—இது போன்ற ஐயப்பாட்டிற்குச் சரியான விளக்கம் இல்லாததினால், 21 வயது நிரம்பிய அனேகத் தோழர்கள் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் இன்னமும் பதிவு செய்யாமல் இருப்பதாக நம் கவனத்திற்கு வருகிறது. வாக்காளர் ஆவதற்கு அரசாங்கம் விதித்திருந்த காலம் முடிவடைந்துவிட்டது. இனி வாக்காளராக மேற்கொண்டு என்ன நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுமென்பதற்குக் கீழ்க்கண்ட விளக்கம் தரப்படுகிறது:—

உங்கள் கிராமம், அல்லது நகரத் தொகுதியின் வாக்காளர் பட்டியலில், 21 வயதிற்கு மேற்பட்டவர்களது பெயர் பதிவு செய்யாமல் விடுபட்டிருந்தால் உடனடியாக அந்தக் கிராமம், அல்லது நகரத்திலுள்ள தாலூக்கா ஆபீசுக்குச் சென்று, வாக்காளராகப் பதிவு செய்துகொள்வதற்கு வேண்டிய பாரம் (நமூனா-4) பெற்றுக்கொள்ளுங்கள். இது இலவசமாக வினியோகிக்கப்படுவதாகும்.

மேற்படி பாரத்தைப் பூர்த்தி செய்துகொண்டு அத்துடன் ரூ. 1-க்கு முத்திரைப் பத்திரம் (நான்ஜுடிஷியல் ஸ்டாம்ப் பேப்பர்) வாங்கி, அதில் குடியிருப்பு சம்பந்தமாய் வாக்காளர் பட்டியலில் தன் பெயர் பதிவுபெற, விட்டுப்போனதாகத் தெரியவருவதால் தன்னைப் பதிவு செய்துகொள்ளவேண்டும் என்பதாகத் தாசில்தார் அவர்களுக்கு மனு எழுதி, முன்பு பூர்த்தி செய்திருக்கும் நமூனா-4யும் ஒன்றாகச் சேர்த்து தபாலிலோ, நேரிலோ தாசில்தாரிடம் சேர்த்துவிடவும். பின்னர் விசாரணை செய்து வாக்காளர் பட்டியலில் உங்கள் பெயரைச் சேர்த்துக்கொள்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தையும் அவர்களே (தாசில்தார்) கவனித்துக்கொள்வார்கள்.

நீங்கள் மனுச் செய்த 15-தினத்திற்குள் எவ்விதத் தகவலும் இல்லையானால், மீண்டும் தாசில்தார் அவர்களுக்கு இதுபற்றி சாதாரணத் தபால் மூலம் நினைவுபடுத்தலாம், தேர்தல் தேதி அறிவிப்புவரை மேற்கண்ட விதத்தில் வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள வாய்ப்பிருக்கிறது.

சென்னை 23--11--56 வெள்ளி

கரி பூசுங்கள்!

வளம் கொழிக்கும் ஆலைகள்: அணைக்கட்டுத் திட்டங்கள் அனைத்தும் வடநாட்டில்!

தென்னாட்டிலோ தேம்பி அழும் நிலையிலே உள்ள மக்களைத்தான் தினந்தினம் காணுகிறோம்!

அதனால்தான் திட்டங்களின் அறுவடையை வடநாடு முதற்கண் அடைந்து பயனுறும் நிலையும்; தென்னகம் பஞ்சத்திலாழ்ந்து பரதவிக்கும் நிலையும் ஏற்பட்டு வருவதைக் காண்கிறோம்!

மாற்றாந்தாய்க் குழந்தையின் நிலையிலே தென்னாடு!

மலையை விழுங்கி நிலைகுலையா உருவம் பெற்றிருக்கும் செல்லக் குழந்தை நிலையிலே வடநாடு!

—நாளுக்கு நாள் இந்தப் பேதங்கள் பெருகி வருகின்றனவே தவிர; குறைந்ததாகத் தெரியவில்லை.

இவை குறையும்—டெல்லித் தலைமைப் பீடத்தில் தென்னாட்டுக் காரர்களோ; அல்லது அவர்களும் வாழவேண்டுமென்று நினைக்கும் பரந்த உள்ளம் கொண்டவர்களோ இருந்தால்!

இரண்டுமே இப்போது இல்லை.

இருக்கின்ற ஒன்றிரண்டு தென்னாட்டுக்காரர்களும் தாங்கள் பிறந்த பூமி இந்தத் தென் தமிழ்த் தரணி என்பதை மறந்தவர்களாக இருக்கிறார்கள்!

மற்றவர்களோ நம்மைப் பற்றிச் சிறிதளவும் கவலைப்படாத நீரோக்களாகக் கொடுங்கோன்மை புரிந்து வருகின்றனர்.

இதுபோன்ற சூழ்நிலைகளால்தான் இன்று தமிழகத்து மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினையே மிகவும் அபாயகரமான சூழ்நிலையை அடைந்திருக்கிறது.

காங்கிரஸ்காரர்களின் கொடுங்கோன்மை வளர்ந்திருப்பது போலவே அன்றாடம் அரிசியின் விலையும் விஷம்போல ஏறிவருகிறது.

காமராசர் தி. மு. கழகத்தை வசைபாடுவதிலே உள்ள வேகமும்; வளர்ச்சியும் இப்போது அரிசிவிலை உயர்விலே காணப்படுகிறது.

போர்க்காலத்திலே திரள் திரளான மக்களை உணவுப் பங்கீட்டுக் கடைகளின் எதிரிலே கண்டு கண்ணீர் வடித்தோம்!

என்றுதான் ஒழியுமோ இந்த நாஜியிசக் கொடுமை! என்றுதான் தீருமோ இந்தப் பொல்லாத போர்!—என்று எதிர்பார்த்துக் கிடந்தோம்! உணவுப் பங்கீட்டுத் தொல்லை ஒழிய; என்றும்போல் மக்கள் உணவுப் பண்டம் வாங்கி உண்டு மகிழ அமைதி நிலவாதா—என ஏங்கியிருந்தோம்!

ஆனால் இப்போது உலகப் போர் எதுவுமில்லை.

இந்திய உபகண்டத்துக்கு அப்பாலுள்ள எந்த சக்தியும் இதில் தலையிடவில்லை.

இருந்தும் விலை விஷம்போல ஏறிக்கொண்டே வருகிறது.

அன்று நாஜிகள் தொடுத்த பொல்லாத போர் காரணமாயிருந்தது.

இன்று?

ஆமாம்; சர்வேறக்குறைய அதுபோன்ற செயல்முறைகளைக் கடைப்பிடிக்கும் கூட்டத்தாரால்தான் இந்த நிலைமையும் ஏற்பட்டிருக்கிறது.

யார் அந்த நாஜிகள்?

தங்கள் தங்கள் பிராந்தியத்தையே செழுமைப்படுத்தத் திட்டமிட்டுச் செயலாற்றும் நீரோக்கள்; தங்கள் பகுதி வாழ்ந்தால் போதும்—மற்றவர்கள் எக்கேடாவது கெட்டு சீரழியட்டும் என்ற கொள்கையைப் பற்றியோர்; தென்னாட்டவர்களை இளிச்சவாயர்கள் என்று நினைத்துவிட்ட கொடுங்கோன்மை கொடியவர்கள்—இப்படி ஒரு எண்ணம் வகுத்துக்கொண்டு நடமாடிக்கொண்டிருக்கும் புதிய நாஜிகளின் ஆதிக்கத் திட்டத்தின் பலனைத்தான் இப்போது தமிழகமெங்கும் ஏழை—நடுத்தர—மக்கள் அரிசி விலை உயர்வை எட்டிப்பிடிக்க வகை தெரியாது; திண்டாடித் தெருவில் நிற்கின்றனர்!

[illegible] தென்னகத்தில் விளைகின்ற உணவுப் பொருள் அனைத்தும் இங்கேயே விநியோகிக்கப்படட்டும்.

—அப்போது இதுபோன்ற அரிசிப் பஞ்சம் வராது என்று நம்பும் கொண்டிருக்கிறார், நம் அமைச்சர் சுப்பிரமணியம்!

அதுபோன்ற செயற்பாட்டினை ஏற்படுத்திக்கொள்ளும் திறனற்ற இவர்களது அடிமை மனப்பான்மையால்; இங்கு விளைவதை வெளி மாநிலங்களுக்கு அனுப்பிவிட்டு இரை ஒட்டிய வயிறும்; உலர்ந்த கண்களுமாய் ஒருவயிற்றுச் சோற்றுக்கு அரிசி வாங்க ஒன்பது மணி நேரம் நியாயவிலைக் கடைகளிலே கால் கடுக்கக் காத்துக்கொண்டிருக்கின்றனர், தென்னகத்து மாந்தர்!

அப்படி அந்த நியாயவிலைக் கடைகளிலாவது நல்ல அரிசி கிடைக்கிறதா? அப்படியாவது காத்திருந்ததன் பலன் கிடைத்து விட்டது என்று பொதுமக்கள் மனம் தேறுவதற்கு மார்க்கம் இருக்கிறதா?

அதுவும் இல்லை.

அந்த நியாயவிலைக் கடைகளிலே புழு நெளியும் அரிசியும்; மூக்கைப் பிடுங்கும் அளவுக்கு நாற்றமேற்றிருக்கும் பண்டமும் தான் பெறமுடிகிறதாம்!

நியாய விலைக்கடை அரிசி இவ்வாறு இருக்கின்ற காரணத்தால் நல்ல அரிசியின் விலையும் இன்னும் அதிகமாக உயர்ந்து போகிறதாம்.

—நிலைமை இவ்வாறு மோசமாகி வருகிறது, இங்கே!

இருந்தாலும் வடநாட்டு அமைச்சர்கள் உண்மையில் தங்களது இரக்கத்தைத் தெரிவித்து; ஆவன செய்ததாகத் தெரியவில்லை!

இதேபோன்ற சூழ்நிலை ஏற்பட்டு கோதுமையின் விலை உயர்ந்திருந்தால் இந்நேரம் கொழும்பு அரசுகளின் மாநாட்டுக்குப்பதில் வேறொரு மாநாட்டையே கூட்டி வடநாட்டு மக்களின் துயர் துடைப்பார், பண்டிதர்!

இப்போது அரிசிவிலை அல்லவா உயர்ந்திருக்கிறது; அதனால்தான் போலும் அமைதியாக இருக்கின்றனர்!

அதுமட்டுமல்ல; முழுப்பொய் ஒன்றினையும் கூறியிருக்கிறார், மத்திய உணவு மந்திரி! உணவுப்பொருள்களின் விலை உயர்வு தடுக்கப் பட்டுவிட்டது—என்று முழங்கிக்கொண்டிருக்கிறார்!

பாவம்; தென்னாடு வந்து பார்த்திராதவர்—அங்கிருந்து இங்கு விலை குறைந்து விட்டதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டு திரிகிறார்!

இதுபோன்ற நேரத்திலேதான் சென்ற கல்கத்தா காங்கிரசிலே பண்டித நேரு கீழ்க்கண்டவாறு பேசினார்:

"நகரத்தில் ஒவ்வொரு காங்கிரஸ் ஊழியரும் சுமார் நூறு குடும்பங்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு உதவி செய்வதற்குப் பொறுப் பேற்றுக் கொள்ள வேண்டும். அவர்கள் கஷ்டப்படும்போது தாமாகவே உதவி செய்ய முன் வர வேண்டும்!"

—ஒவ்வொரு காங்கிரஸ் ஊழியரும் தேர்தலில் ஓட்டு வாங்குவதற்காக நூறு குடும்பங்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமாம்!

பேரன்பு கொண்ட பொது மக்களே! உங்கள் குடும்பத்துப் பொறுப்பேற்க இந்தப் பொல்லாதவர்கள் வரப்போகிறார்களாம்!

வரட்டும்; வந்தால் இப்போது ஏற்பட்டிருக்கும் இந்த இழிவான நிலையை எடுத்துக் கூறி அவர்கள் முகத்திலே கரியை அள்ளிப்பூசி அனுப்புங்கள். சுப்ரமணியனார் சொல்வதுபோல நமது மாநிலத்து விளைச்சலை நமது மாநிலத்துக்குப்பயன் படுத்திக்கொண்டால் அரிசி விலை இப்படி உயருமா, உபயோக மற்றவர்களே!—என்று கேளுங்கள்! அப்போதுதான் இந்தக் கொடும்புலி நிகர்த்த கொடுங்கோலர்களுக்குப் புத்தி வரும்!

★

அந்தோ "தசாவதாரங்கள்!"

"பொதுத் தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கிற இச்சமயத்தில் உணவுப் பொருள்களின் விலைவாசியேற்றத்தைக் குறைப்பதற்கு உடனடியான நடவடிக்கையெடுக்காவிட்டால் ஆள்கிற கட்சிக்கு ஆபத்தாக முடியலாம்."

—என்று உணவுப் பொருள்களின் விலை உயர்ந்து விட்டதே என்று பொது மக்கள் சார்பாகக் கவலைப்பட்டு அல்ல; காங்கிரசுக்குக் குழி தோண்டப்பட்டு விடுமே என்ற அனுதாபத்தில் சென்ற 19—11—56 அன்று ஒரு தலையங்கம் தீட்டியிருக்கிறது 'விடுதலை!'

ஆமாம்; மக்கள் மன்றத்தின் மகத்தான கருவியாக விளங்கி வந்த விடுதலை இப்போது மக்கிப்போய் மடிவதற்குத் தயாராகி வரும் ஆளும் கட்சியின் பக்கவாத்தியமாக மாறி விட்டது உண்மைதான்!

விலைவாசிகள் உயர்ந்து விட்டன; அது குறித்து ஆட்சியிலிருப்பவர்கள் 'அலட்சியத்துடன்' இருக்கின்றனர்—ஒப்புக் கொள்கிறது விடுதலை.

ஆனால் ஆட்சியாளர்கள் ஏன் இப்படி அலட்சியமாக இருக்கின்றனர்?

இதற்கு ஒரு விசித்திரமான 'வியாக்யானம்' தந்திருக்கிறது 'விடுதலை!'

"விலைவாசி ஏற்றத்துக்குத் தக்கபடி மக்களின் புத்தியில் மாறுதல் ஏற்படக் காணோமே! படி அரிசி ஒரு ரூபாய் விற்கின்ற இந்நாளிலும் சினிமாக் கொட்டகை முன்பு "க்யூ" வரிசை குறையக் காணோமே! பஞ்சமாவது! பட்டினியாவது ..."

—இப்படி ஆட்சியாளர்கள் திருப்பிக் கேட்கலாமாம்—எழுதுகிறது, 'விடுதலை!'

மேலும் உதாரணம் ஒன்றையும் மேற்கோள் காட்டியிருக்கிறது!

"நாடார் வியாபாரி ஒருவருடன் நாம் சென்ற வாரம் பேசிக்கொண்டிருந்த போது தாம் ஒரு நாள் சினிமாவுக்குச் சென்றதாகவும், ரூ. 1—12—0 இடத்தில் உட்காரச் சென்றபோது தம் வீட்டுச் சமையல்காரர் தமக்குப் பக்கத்தில் முன் கூட்டியே உட்கார்ந்திருந்ததாகவும் குறிப்பிட்டு விட்டுப் "பாட்டாளியின் பணம் போகிற போக்கைப் பார்த்தீர்களா?" என்று கேட்டார்..."

—யாரை நாடார் எனக் கூறிக்கொண்டிருந்தார்களோ, அவர்களையே நாடிக் கிடக்கும் அவர்கள் 'நாடார் வியாபாரி' ஒருவரைச் சந்தித்த கதையை இவ்வாறு எழுதியிருக்கிறது!

விலைவாசி உயர்கிறது!

ஆனாலும் சினிமாக் கொட்டகை முன்பு "க்யூ" வரிசை உயர்ந்து கொண்டுதானே போகிறது.

அதனால் விலைவாசி உயர்வு பற்றிக் குறைபட்டுக் கொள்வானேன்?

—'விடுதலை' எழுப்பியிருக்கும் வாதம் இந்தப் பான்மையில் தான் செல்கிறது!

"முட்டையும் பாலும் அருந்த வேண்டிய பணத்தை சினிமாக் கொட்டகையில் கொட்டிப் பாழாக்கக் கூடாது; இது மடமை மட்டுமல்ல; குடும்பத்துக்குச் செய்கின்ற கொடுமையாகும்!"

—இதுவும் 'விடுதலை'யின் தலையங்கத்தில்தான்!

பல மணி நேர உடலுழைப்பிற்குப் பிறகு சில மணி நேரப் பொழுதுபோக்கு பெறுவதற்காக சினிமா பார்ப்பது மடமை! குடும்பத்துக்குச் செய்யப்படுகின்ற கொடுமை!

—ஆனால் அதே இதழின் கடைசிப் பக்கத்தில் வேறொரு விளம்பரமொன்று வந்திருக்கிறது.

"ஊரறிந்த கதை!
ஒரிஜினல் காவியம்!

விரைவில் எதிர்பாருங்கள்!

நடிகவேள் எம். ஆர். ராதா நடிக்கும் தசாவதாரம் (நாடகம்) (பை, எஸ். குருசாமி பி. ஏ. ஆசிரியர்: 'விடுதலை') ஏராளமான பொருட் செலவில் தயாராகிறது."

—இது 'விடுதலை'யில் வந்திருக்கும் விளம்பரம்!

நாடகத்திற்கும் சினிமாவிற்கும் பொழுதுபோக்கு என்னும் நோக்கில் பார்க்கும்போது அதிக வேறுபாடு இருப்பதாக அறிவுடையோர் கூற முடியாது.

சினிமாவின் தந்தைதான் நாடகம்! அத்தகைய நாடகமொன்று 'விடுதலை' ஆசிரியரால் எழுதப்பட்டு நடிக்கப்பட இருக்கிறது.

நினைவிருக்கட்டும்; விலைவாசிகள் உயர்ந்திருக்கும் இந்த நேரத்தில், அந்த நாடகம் "ஏராளமான பொருட் செலவில் தயாராகிறது"

அதே இதழில் 'விடுதலை' எழுதியிருக்கிறது இப்படி:

"குடிப்பது கூழாகவும் கொப்பளிப்பது பன்னீராகவும் இருப்பது மடமையல்லவா? "விலைவாசிகள் ஏறி விட்டன; அரிசிவாங்கக்காசில்லை; ஒரு ரூபாயாவது சம்பளம் அதிகப்படுத்திக் கொடுங்கள்; எங்களால் வாழ்க்கை நடத்தவே முடியவில்லை" என்று முதலாளிகளையும், சர்க்காரையும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டே, ஒரு ரூபாய் டிக்கெட்டுக்காக சினிமாக் கொட்டகை முன்பு கடும் வெய்யிலில் 'க்யூ' வரிசையில் நின்று கொண்டிருந்தால் முதலாளிகளின் மனமும் அரசாங்கத்தாரின் மனமும் இரங்குமா?"

அதே சமயத்தில் 'தசாவதாரம்' விளம்பரத்தையும் வெளியிட்டுக் கொண்டிருக்கிறது!

விலைவாசிகள் விஷம் போல உயர்ந்து கொண்டே போகின்றன. ஆனாலும் சினிமா போன்ற பொழுது போக்குச் சாதனங்களில் மக்கள் பணத்தைப் பாழாக்கும்போது விலை உயர்வால் என்ன வந்துவிடப் போகிறது என்று ஆட்சியாளர் திருப்பிக் கேட்கலாமே; அப்போது கேட்பது நியாயமாகத்தானே இருக்கும் எனவும் கேட்டிருந்தது.

நாடார் வியாபாரி குறைபட்டுக் கொண்டதையும் கூறியிருக்கிறது.

ஆனால் 'தசாவதாரம்' விளம்பரம் வெளியிடத் தவறவில்லை!

ஏன், இப்போது மட்டுமென்ன, ஆட்சியாளர் திருப்பிக் கேட்காமலா இருக்கப் போகிறார்கள்!

விலை வாசியாவது; ஏறவாவது? தசாவதாரம் நாடகக் கொட்டகை முன்பு "க்யூ" வரிசை குறையக் காணோமே!

—இப்படிக் கேட்கலாம் அவர்கள், நாளை 'தசாவதார'த்திற்குக் கூட்டம் அதிகமாக வந்தால்!

"அரிசி வாங்கக் காசில்லை; ஒரு ரூபாயாவது சம்பளம் அதிகப்படுத்திக் கொடுங்கள்; எங்களால் வாழ்க்கை நடத்தவே முடியவில்லை" என்று முதலாளிகளையும், சர்க்காரையும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டே, ஒரு ரூபாய் டிக்கெட்டுக்காக நாடகக் கொட்டகை முன்பு கடும் வெய்யிலில் "க்யூ" வரிசையில் நின்று கொண்டிருந்தால் முதலாளிகளின் மனமும், அரசாங்கத்தார் மனமும் இரங்குமா?"

—இப்படி வேறு பத்திரிகைகளிலே தலையங்கம் வரலாம், இப்போது 'விடுதலை'யில் வந்திருப்பதைப் போல!

இன்று 'விடுதலை'யாரிடம் குறைபட்டுக் கொண்ட அதே 'நாடார் வியாபாரி' நாளை 'தசாவதாரத்'திற்குச் செல்லலாம்; அதில் 'காமராசருக்கு ஜே!' என்ற கோஷத்தைக் காதாரக் கேட்கலாம்—என்ற பாச உணர்ச்சி காரணமாக!

அப்போதுகூட அந்த வியாபாரியின் எதிரே அவர் வீட்டுச் சமையற்காரர் முன் கூட்டியே உட்கார்ந்திருக்கலாம்!

❋ தொடர்ச்சி 10-ம் பக்கம்

வித்தியாசமில்லை

எனக்கு இருமல், சளி, ஓயவில்லை! உடல்நலம் சரியில்லை. அதனால் தான் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுகிறேன்!

(விரட்டப்பட்ட) ஆச்சாரியார்.

எனக்கு உடல் நலம் சரியில்லை; டாக்டர்கள் ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்லி இருக்கின்றனர். அதனால் நான் பதவியிலிருந்து ஓய்வு பெறுகிறேன்!

—ஆண்டனி ஈடன்.

காதலுக்குக் கண்ணில்லை

• தொடர் நாடகம் •

தில்லை வில்லாளன் எம். ஏ.

[மாறுவேடத்தில் இருக்கும் நகைமுகத்தானை அழைத்துப் பேசுகிறாள் குயில் குரலாள்.]

குயில்குரலாள்: உங்களுக்கு என்ன வேண்டும்?

நகைமுகத்தான்: மன்னனிடம் இவர்கள் குறைகளைக்கூற வேண்டும். அதற்கு நேரம் வேண்டும்.

கு.கு: காவலாளிகளே, அண்ணனிடம் இவர்களை அழைத்துக் செல்வதுதானே!

காவலாளி: அரசர் உத்தரவு அதுவல்லவே இளவரசி.

கு. கு: அரசர் உத்திரவுதான் என்ன?

காவ: இம்மாதிரி ஆட்களை, நாய்களை விரட்டியடிப்பது போல விரட்டியடிக்கச் சொல்லியிருக்கிறார்.

கு. கு: அப்படியா? அரசன் என்றால் அவ்வளவு ஆணவமா? ஏழைகள் துயர் துடைக்காதவன் அரசனா? அண்ணனானால் என்ன? அநீதி எவர் செய்தாலும் எதிர்க்கப்பட வேண்டியது! குடி மக்களே, உங்களை நானே அரசர் முன் அழைத்துச் செல்கிறேன் — உங்கள் பிரதிநிதியாக நான் இருந்து வாதிடுவேன்.

குடிமக்கள்: இளவரசி குயில் குரலாள் வாழ்க! இளவரசி குயில் குரலாள் வாழ்க! கொடுமை ஒழிக! அநீதி ஒழிக! கொடுங்கோன்மை ஒழிக! கொடுங்கோலன் புலிவலன் ஒழிக!

காட்சி--16

[மன்னன் புலிவலன், ஆள வந்தானுடன் உப்பரிகைக்கு வருகிறான். அவனுடன், அறவாழி நகரத்தலைவர் நல்லறிவாளனும் வருகிறான். மன்னனும், நகரத்தலைவனும் ஏதோ பேசிக்கொண்டே வருகின்றனர். வந்தவுடன் புரட்டன் பேசுகிறான்.]

புர: கருணைமிக்கவரே, கீழே இரண்டாயிரம் மக்கள் இருக்கிறார்கள்—கணத்திற்கு கணம் அவர்கள் அனலாகி வருகிறார்கள்.

புலி: த்சு, வரட்டுக்கூச்சல் கிளப்பி, தொண்டையையும், காயவைத்துக் கொள்கிறார்கள்! கூவும் மனிதன் ஏதும் செய்வதில்லை. நான் அமைதியாக இருக்கும் மனிதனைக் கண்டு அஞ்சுகிறேன். (மீண்டும் பெரும் சத்தம் கேட்கிறது) அவர்கள் சத்தத்தில் சந்தம் சரியில்லை—சுதி மாறுகிறது—தாளம் தவறுகிறது. இனி, நம் வீரர்களின் வெடிகுண்டுகளுக்கு வேலை தர வேண்டும். என்னால் சுதி தவறிய சங்கீதத்தைக் கேட்க முடியாது. புறங்கூறுவோனே போ. காவல் காக்கும் வீரர் தலைவனிடம் நம் விருப்பத்தை தெரிவி. இன்னும் இரண்டொரு மணித் துளிகளில், மாளிகை முன்வெளி காலியாக இருக்கவேண்டும் என்றுசொல் ஏன் நிற்கிறாய்—நான் கூறுவது காதில் விழவில்லையா? உம், போ. கட்டளையை நிறைவேற்றச் சொல், காவலர் தலைவனை.

நல்லறிவாளன்: கீழே திரண்டுள்ள மக்களின் குறைகளைக் கேட்கவேண்டுமென இறைஞ்சுகிறேன்.

[மன்னன் புலிவலன், தனது தங்கத் தவிசில் அமர்ந்தான்.]

அமர்ந்தபடி பேசினான்.

புலி: முக்கனி வகை. சென்ற ஆண்டுபோல, இந்த ஆண்டு கிடைக்கவில்லை. நல்லறிவாளரே, அதுபற்றித்தானே கூறினீர். (கூச்சல் கீழிருந்து கிளம்பிற்று) என்ன கூச்சல் இது?

ஆள: (சாளரத்தின் மூலம் பார்த்தபடி) தங்கள் தங்கையார் அந்த மக்களின் நடுவில் நின்று கொண்டிருக்கிறார். காவல்வீரர் தலைவர் தங்கள் கட்டளைப்படி நடக்க முடியாமல் தவிக்கிறார்.

புலி: பொல்லாதவளே, அவளை அங்கு நிற்கவைத்திருக்கிறது.

ஆள: மன்னவரே, தங்கையார் அக்கூட்டத்தவரிலிருந்து பன்னிருவரை அழைத்துக் கொண்டு அரண்மனையில் நுழைந்து விட்டார்.

புலி: அவள், துடுக்குத் தனத்தின் உருக்கு பொம்மையாகத்தானிருக்கிறாள்.

ஆள: இதோ, இளவரசி குயில் குரலாள்.

பர: கதவுகளை இழுத்துத் தாளிடு—காலை நேரக்குளிர், கடுமையாகத்தானிருக்கிறது!

கதவு தாளிடப் பட்டன. வரண்ட தலையும், குழிவிழுந்த கண்களும், ஒட்டிய கன்னங்களும், கிழிந்த ஆடையும் கொண்ட மக்களை அழைத்துக் கொண்டு வந்தாள். தாளிடப் பட்ட கதவுகளைத் தட்டி, மன்னரின் தரிசனம் கோரினாள். கதவுகள் திறக்கப் பட்டன. இளவரசி மண்டியிட்டாள் மன்னன் முன். மன்றாடினாள், அவர்கள் பால் கருணை காட்டும்படி.]

கு. கு: மன்னரே, இவர்கள் குறை கேட்க மனங்கொள்ள வேண்டும்.

புலி: தங்கையே! இதென்ன திருக்கூத்து. ஆடை தைத்துத் தரும் வேலையா எனக்கு—இந்தக் கிழிந்த ஆடைக்காரர்களை இழுத்து வந்திருக்கிறாய்?

கு. கு: என் காவைக்காட்டிலும், அந்தக் கிழிந்த ஆடைகள் அவர்கள் குறைகளை திறமையாக எடுத்துப் பேசும் என நம்புகிறேன்.

புலி: என்ன குறைகள்?

கு. கு: மன்னவரே! நீங்களும், நானும் இங்கு கூடியுள்ள பெருநிலக்கிழார்களும், நினைத்துப் பார்க்காத சாதாரண பொருள்—ஒரு கவளம் சோறு கிடைக்கவில்லை. அதனைப் பெறவே முடியாது தவிக்கிறார்கள். பருத்திக் கொட்டையையும், கத்தாழையையும் தின்கிறார்கள்.

முதல்வன்: ஆம், அரசே! உண்மையில் சாப்பிடுகிறேன்.

புலி: அப்படியா—மிகநல்லது—வலுவான உணவாயிற்றே அது! நம் மாடுகளுக்கு தரும் உணவே அதுதானே!

கு. கு: அவர்கள் குடிக்கும் நீர் கிடைக்கவில்லை யென்கிறார்கள். தூசியும் பாசியும் படிந்துள்ள குட்டைகளைச் சரியாக்கித் தந்தாலே போதும் என்கிறார்கள்.

புலி: தண்ணீரை அருந்துவதா? எந்த நாட்டு மக்கள்? தகாது, பால் தினம் பருகட்டும்.

இரண்டாமவன்: அந்தோ, தங்கள் வரிகள் நாளுக்கு நாள் வளர்ந்து, எங்கள் கழுத்தை இறுக்கி வருகிறது. பால் வாங்கி அருந்த வழியில்லையே!

புலி: நன்று, நன்று. பாலைக் குடிப்பதுகூடாது. என பெரியோர் கூறியுள்ளனர். ஆலயத் திருப்பணிக்கே பால் போதவில்லை; பால் வாங்க முடியாமல் அறநெறியை வளர்க்க உதவுவது நம் வரிகள்தானே — ஆகவே அந்த வரிகளை வாழ்த்துங்கள்.

கு. கு: அண்ணா! நாம் பட்டும் பீதாம்பரமும் பகட்டாக அணிந்து பவனி வருகிறோம். அணிமாடங்களிலும், மணிக் கூடங்களிலும், நம் தேவைகளை, விழியசைவாலே

✱ 8-ம் பக்கம் பார்க்க

தயாராகின்றன—
அழகுத் தமிழ் ஏடுகள்!
மு. க. வின்
வெள்ளிக்கிழமை
'முரசொலி'யில் நீங்கள் படித்து மகிழ்ந்த
உணர்ச்சிக் காவியம்!
என்றும் உங்கள் நூலகத்தில்
இருக்கவேண்டிய அரிய புத்தகம்!
✱
வால் நட்சத்திரம்
மாறன், எம். ஏ.
எழுதிய சிந்தனைக்கு விருந்தளிக்கும் சிறு கதைகள்!
—விபரங்கட்கு—
திராவிடப் பண்ணை
தெப்பக்குளம் : : திருச்சி

ஒருநாள் பழகுவதற்குள்ளேயே அவ்வளவு தூரம் வந்துட்டுதா? என்னையே பாட்டில் கொண்டுகிட்டு வரச் சொல்றீங்களே......சரிதான்!

கறுப்பன்: ஏன் கண்ணம்மா—கொண்டு வந்தால் என்ன? நளாயினி, தன் புருஷனை பரத்தை வீட்டுக்குத் தூக்கிட்டுப் போகலை!...

கண்: என்னுது; அப்படின்னு நான் வந்து உங்களுக்கு... நளாயினியா?

கறு: அய்யய்யோ—நீ நளாயினியாயும் இருக்க வேண்டாம்—நான் குஷ்டரோகியாவும் இருக்க வேண்டாம்!

கண்: குடிகாரன் குஷ்டரோகியைவிட மோசமானவன்...

கறு: எப்படி? தப்பு நீ சொல்றது!

கண்: குஷ்டரோகியிடமும் யாரும் நெருங்க முடியாது—அதுபோல குடிகாரனிடமும் யாரும் நெருங்க முடியாது! ஆனால் குஷ்டரோகியால் ஒழுங்காகப் பேச முடியும்!

கறு: குஷ்டரோகியால் பேச முடியும்—ஒத்துக் கொள்கிறேன்! ஆனால் குடிகாரனைப் போல கவிதா உணர்ச்சியோடு வார்த்தைகளைக் கொட்ட எந்தக் குஷ்டரோகியாலும் முடியாது! கண்ணம்மா! குஷ்டரோகி, குடிகாரன் என்றெல்லாம் கூறுகிறாயே; இவர்கள் இருவரையும் விட நெருங்கத்தகாத சிலர் இருக்கிறார்களே உனக்குத் தெரியுமா?

கண்: எங்கேயிருக்கிறார்கள்?

கறு: எங்கே யென்று மாத்திரம் கேட்டால் போதாது! எப்படி யிருக்கிறார்கள்? யார் அவர்கள்? இதுவரை எங்கேயிருந்தார்கள்?-என்றெல்லாம் கேட்க வேண்டும்!...

கண்: சரி; நான் கேட்டதாகவே வைத்துக் கொண்டு பதில் சொல்லுங்களேன்!

கறு: இதுவரை வெள்ளைக்காரனின பாதந்தாங்கிகளாய் இருந்தார்கள்; 'சர்'களாய், 'ராவ்பகதூர்'களாய், 'திவான்பகதூர்'களாய் வாழ்ந்தார்கள்! இப்போது அவர்கள் காங்கிரசிலே இருக்கிறார்கள்......அவர்களை யெல்லாம் பார்க்கக் கூடிய அரிய சந்தர்ப்பமொன்று விரைவிலே வரப் போகிறது! அதுதான் பொதுத் தேர்தல்!

கண்: அவர்களைப் பற்றி யெல்லாம் குறை பேசுவதற்கு உங்களுக்கு என்ன தகுதி யிருக்கிறது......? நீங்கள் என்னதான் நீதி—நெறி—நேர்மைகளைப் பற்றிப் பேசினாலும் குடிகாரன் பேச்சு என்ற ஒரே வார்த்தையில் எல்லாமே அடிபட்டுப் போகும்!

கறு: நான் ஏன் குடிக்கிறேன்? உல்லாசத்திற்காகவா? மெருகு குலையாத வாழ்க்கையும், மெய் மறந்த நிலையும் வேண்டுமென்று மதுப் புட்டிகளைக் காலி செய்கிறார்களே: அவர்களைப் பின்பற்றியா? அல்ல கண்ணம்மா! அதற்காக அல்ல! உயிரைப் பணயமாக வைத்து உழைத்தேன். மூச்செல்லாம் கட்சி கட்சியென்றே பாடுபட்டேன். நானே பெருமைப்பட்டுக் கொள்ளவும்—பெருமூச்சு விட்டு ஆறுதல் பெறவுமான பல தியாகச் செயல்களிலே ஈடுபட்டேன்! என் பணியை மதிப்பதற்கு என் கூடாரத்திலே ஆள் இல்லை! ஒண்டுவதற்கு வந்தவர்களும், ஒளி விடுவதற்குப் புகுந்தவர்களும், போக்கிடமற்றுக் கிடப்பவர்களும், என்னைப் பொல்லாங்கு கூறவும்-இழித் துரைக்கவுமான நிலைமைக்கு ஆளானேன்! கஷ்டப்பட்டவர்கள் கதறுகிறேம்! கங்காணிகள் பலர் கதருடையில் காட்சி தருகிறார்கள்! "வெள்ளையனே வெளியேறு!" என்று வாய் கிழியக் கத்தினேம் — இன்று எங்களை வெளியேறு என்று துரத்துகிறார்கள்; அப்போது தூரத்திலே நின்று வேடிக்கை பரர்த்து விட்டு இன்று காங்கிரஸ் மண்டபத்திலே தொத்திக் கொண்ட வௌவால்கள்! யாருக்குத்தான் கண்ணம்மா விரக்தி தோன்றுது! அந்த விரக்தியிலே மனிதனுக்கு மனச் சாந்தி அளிக்கும் மருந்து எது? பக்தர்கள் கூறுவார்கள் பகவத் பஜனை யென்று! நான் கூறுகிறேன் மது வகையரு என்று!...

கண்: நீங்கள் சொல்லும் இந்த மருந்தெல்லாம் தலைவலிக்கு 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுவது போல!.....தற்காலிக சாந்தி!.........தலைவலி அடிக்கடி ஏன் ஏற்படுகிறது என்று ஆராய்ந்து—அடிப்படைக் காரணம் வயிற்றுக் கோளாறு என்று கண்டுபிடித்து—அதற்கேற்ற மருந்து வழங்கப்பட வேண்டும்... இல்லையா?...

கறு: நீ சொல்லும் மருந்து எது? கொஞ்சம விபரமாகவே சொல்லேன் கண்ணம்மா!

கண்: முதலில் குடிப்பதில்லை யென்று நீங்கள் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்!

கறு: எதை? நீ சொல்லும் மருந்தையா?

கண்: மருந்தல்ல நான் குறிப்பிடுவது—உங்களை விஷமாக்கும் மதுவை!..மனச் சாந்திக்காக நீங்கள் தேர்ந்தெடுத்திருக்கும் அந்தத் தீய மருத்துவத்தைக் கைவிட வேண்டும்.

கறு: பிறகு?

கண்: காங்கிரசில் இருந்து கொண்டுதான் மக்களுக்கு உதவி செய்ய இயலுமா என்று யோசிக்க வேண்டும்.

கறு: காங்கிரசில் இருந்தா? சரிதான் போ!...அதிலிருந்து மக்களுக்கு உதவி செய்யலாம் என்ற நம்பிக்கை மகாத்மா காந்தியோடு அழிந்து விட்டது! தியாகி சங்கரலிங்கத்தின் பிணத்தைத் பார்த்த பிறகும் மனமிளகாத மகா பாபிகளம்மா இன்று காங்கிரசிலே கொலு வீற்றிருக்கிறார்கள்!

கண்: நீங்களோ மக்கள் சேவையை விரும்புகிறீர்கள்—அதற்குக் காங்கிரசிலோ இடமில்லை!...அப்போது என்ன செய்ய வேண்டும்?

கறு: குடிக்க வேண்டும்—

கண்: மறுபடியும் வேதாளமாகிறீர்களே; மக்களுக்கு உதவி செய்யும் இயக்கம் ஏதாவது இருக்கிறதா என்று ஆராய்ந்து பார்த்தால் என்ன?

கறு: ஆராய்வதென்ன—நிச்சயமாக மக்களுக்காகப் பணியாற்றும் இயக்கம் தமிழ் நாட்டிலே இருக்கிறது!... எனக்குத் தெரியாமல் இல்லை......ஆனால் அதில் போய் சேருவதற்குத்தான் எனக்கு சற்று......

கண்: பயமாயிருக்கிறதா? வெட்கமாயிருக்கிறதா?....

கறு: என்னை நம்புவார்களா என்று சந்தேகமா யிருக்கிறது.

"முரசொலி"

பொங்கல் மலர்-1957

★

★ ஆண்டு தோறும் உங்கள் இல்லத்துக்குப் புது விருந்து படைத்து, மகிழ்ச்சியையும், பூரிப்பையும், பொங்கலிடச் செய்த "முரசொலி" இந்த ஆண்டும் பொங்கல் மலர் படைக்க இருக்கிறது.

★ இது பற்றிய முழு விபரமும் அடுத்த இதழில்....

: எந்த இயக்கத்தை நீங்கள் குறிப்பிடுகிறீர்கள்?

...! அதில் யாராவது எனக்குத் தெரிந்தவர்கள் இருந்தால் கூடுமான வரையில் சிபாரிசு செய்கிறேன்.

சிபாரிசு செய்து சேர்வதைவிட என் செயல் மூலம் அவர்களின் நம்பிக்கைக்குரியவனாக ஆவதையே நானும் விரும்புகிறேன்; அவர்களும் விரும்புவார்கள்!

: அவர்களோடு சேராமல் செயல் புரிவது எப்படி?

: ஏன் முடியாது? நான் அந்தக் காரியத்தைச் செய்து காட்டுகிறேன் பார்!...தேர்தல் வரப் போகிறது; இதே கதர்ச் சட்டையுடன் மேடையில் ஏறி காங்கிரசின் அட்டூழியங்களை எடுத்துச் சொல்வேன்! மதுவிலக்குப் பிரச்சாரம் செய்த மகாத்மா காந்தியின் சீடர்கள் நடத்தும் சர்க்காரிலே, விருந்துகளிலே வழங்கப்படும் விஸ்கி, ஒயின் முதலிய உயர்தரச் சரக்குகளுக்கு இருபதாயிரம், முப்பதாயிரம் என்று ஆகிறதாக மத்ய சர்க்காரின் ஆடிட்டிங் அறிக்கையே கூறுகிறது என்று சுட்டிக்காட்டுவேன்! ஜாலியன் வாலாபாக்கிலே டயர் என்ற வெள்ளைக்காரன் ஆயிரத்து அறுநூறு ரவுண்டுகள் தான் சுட்டான்! இப்போது அகிம்சா சர்க்காரில் மொரார்ஜி தேசாய் பம்பாய் கலவரத்தின் போது இரண்டாயிரத்து ஐநூறு ரவுண்டுகள் சுட்டிருக்கிறார் என்ற பயங்கரக் கணக்கை மக்கள் மன்றத்தில் எடுத்து வைப்பேன்! ஐந்தரை லட்சத்துக்கு வெளி நாட்டிலே ஒரு மைதானத்தை ஏலத்துக்கு எடுத்து அதற்கு ஒரு லட்ச ரூபாய் தரகு கொடுத்து, கடைசியில் அந்த இடம் கட்டிடம் கட்ட லாயக்கு இல்லையென்று கைவிட்டு விட்டார்களே, அந்த ஊழலையும், ஒரு பெரிய கப்பலை விலைக்கு வாங்கி, அதற்கு அறுபத்தையாயிரம் ரூபாய் செலவில் ரிப்பேர் செய்து, கடைசியில் கப்பல் கடலில் ஓடத் தகுதியில்லை யென்று 'காயலான்' கடையில் பழைய விலைக்கு விற்று விட்டார்களே; அந்த ஊழலையும் இன்னும் இது போன்ற எண்ணிறந்த நிர்வாகத் தவறுகளையும் மக்களிடம் புள்ளி விபரத்தோடு—அரசாங்க ஆதாரத்தோடு மெய்ப்பித்துக் காட்டுவேன்!...

நீங்கள் காங்கிரசை எதிர்த்துத் தேர்தல் பிரச்சாரம் செய்வதால் அவர்களுக்கு உங்கள் பால் திருப்தி ஏற்படுமென்றால்; அவர்கள் யார் என்று தான் சொல்லுங்களேன்!

முத்தாரம்

டிசம்பர் இதழில்...

★ ஓவியர் மாதவனின் அழகு முகப்பு!

★ பெருங் கதை மன்னர் தாமஸ் ஹார்டி எழுதிய அருமையான நாவல் சுருக்கம்!

★ மற்றும் வழக்கம்போல் எல்லாச் சிறப்புகளும் கொண்டு வெளிவருகிறது!

கறு: தவறு — தவறு! காங்கிரசை எதிர்ப்பதால் அவர்களுக்குத் திருப்தி ஏற்பட்டுவிடாது! எதிர்ப்பு—ஆதரிப்பது இது போன்ற இரண்டொரு செயல்களுக்காக மகிழ்ந்து நம்மைத் தங்கள் கட்சியில் சேர்த்துக் கொள்ள ஒரு இயக்கம் இருக்கிறது...

கண்: எது அது?

கறு: திராவிடர் கழகம்! அதாவது பெரியார் கட்சி—அவர் எதிர்க்கச் சொன்னால் எதிர்க்க வேண்டும்—ஆதரிக்கச் சொன்னால் ஆதரிக்க வேண்டும்—நான் சொல்லுகிற இயக்கம் அதுவல்ல; குறிக்கோள்—கொள்கை—இலட்சிய வெற்றி—இவைகளுக்காக எல்லாத் துறைகளிலும் பணியாற்றும் தம்பிமார்களைப் பெற்றிருக்கும் அறிஞர் அண்ணா உலவும் தி. மு. கழகம்!...அதுதான் இன்று நாட்டிலே பெரிய தோர் விடுதலை இயக்கம்! உரிமை முழக்கமிடும் உண்மைத் தொண்டர்கள் நிறைந்த பாசறை!

கண்: அப்படியா?......அதில் சேரவா நீங்கள் விரும்புகிறீர்கள்...?

கறு: அடடே! உன் மகிழ்ச்சியைப் பார்த்தால் நீ கூட தி. மு. கழக அனுதாபி மாதிரி தெரிகிறதே—

கண்: அனுதாபியென்ன; மகளிர் மன்றத்திலே நானும் ஒரு உறுப்பினராக முயற்சித்துக் கொண்டிருக்கிறேன்.

கறு: மகளிர் மன்றமா?...

கண்: ஆமாம்: தி. மு. கழகத்து மாணவர் அமைப்பு போல-அது ஒரு அமைப்பு!

கறு: மகளிர் மன்றமென்றால்... ஆங்கிலத்திலே "லேடீஸ் கிளப்" என்பார்களே...

கண்: அல்ல அல்ல; இது விளையாட்டு மன்றமல்ல—'லேடீஸ் கிளப்' என்பது ஊரைப் பற்றியும் நாட்டைப் பற்றியும் கவலைப்படாதவர்கள் உலகத்தைப் பற்றிக் கதையளக்கும் இடம்! மகளிர் மன்றம் புறநானூற்றுத் தாய்மார்களை நினைவுபடுத்தி அவர்கள்வழியில் தாய்மார்களை வீராங்கனைகளாகத் தயாரிக்கும் பாடி வீடு!...

கறு: அதிலே நீ உறுப்பினராவதா?...ஆச்சரியம்! உங்க அப்பா காங்கிரஸ்.........

கண்: சேற்றிலே செந்தாமரையிருக்கக்கூடாதா?.........

கறு: தி. மு. கழகக் கொள்கைகள் எல்லாம் சரிதான்... ஆனால் திராவிடநாடு கேட்பதுதான் எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவுமில்லை—புரியவுமில்லை!

கண்: புரியாததற்கு முன்பு பிடிக்கவில்லையென்று எப்படிச் சொல்கிறீர்கள்?...

கறு: உன்னால் முடிந்தால் திராவிட நாட்டுப் பிரச்சினையைக் கொஞ்சம் புரியவையேன் பார்க்கலாம்...

கண்: இப்போது நீங்கள் நிதானமாகத் தானேயிருக்கிறீர்கள்!.....போதையோடு இல்லையே...

கறு: ஏன்?

கண்: திராவிட நாடு பிரச்சினையைப் புரிந்து கொள்ள சற்று தெளிந்த நிலையில் இருக்க வேண்டும்.

கறு: குறும்பு!...சரியாகத்தான் இருக்கிறேன்; சொல்லு! சொல்லு!!

கண்: கொஞ்சம் எட்டியே உட்காருங்கள்....சொல்லுகிறேன்...

(தொடரும்)

விற்பனையாகிறது!

ரங்கோன் ராதா

(கதை வசனப் புத்தகம்)

விலை 8 அணா : : கழிவு 40 சதவீதம்

[கழிவு நீக்கி முன் பணம் பெற்றோ, அல்லது வி. பி. பி. மூலமோ அனுப்பப்படும்.]

முரசொலி பதிப்பகம், சென்னை-6.

திருச்சி மாவட்டத்தில்
மு. கருணாநிதி
சுற்றுப் பயணம்

டிசம்பர் 2, திருச்சி (டவுன் ஹால்)
டிசம்பர் 3, கரம்பக்குடி (புதுக்கோட்டை)
டிசம்பர் 4, கனியாப்பட்டி (புதுக்கோட்டை)
டிசம்பர் 5, புதூர்பாளையம் (லால்குடி வட்டம்)
டிசம்பர் 6. மணப்பாறை
டிசம்பர் 7, மாலை 3 மணி (லப்பைகுடிக்காடு)
,, 7 மணி (பெரம்பலூர்)
டிசம்பர் 8, துறையூர்.

அறிவிப்பு

'உதய சூரியனை' நாடகமாக நடத்த விரும்பிப் பல தோழர்கள் கடிதம் எழுதியுள்ளனர். இதை நாடகமாக நடத்தும் அமைப்பில் மாற்றங்களோடு விரைவில் நூல் வடிவில் வருகிறது. அதன் பிறகு அனுமதி பெற்று நடத்திக் கொள்ளலாம் என்று அறிவிக்கிறோம்.

—ஆசிரியர்.

காதலுக்கு...

✲ 5-ம் பக்கத் தொடர்ச்சி

தெரிந்து விரைந்து முடிக்குப் பணியாளர்கள் ஆயிரமாயிரம் உண்டு ஆனால், கதிரவன் நுழையாத தெருக்களில், வறுமை தாங்காமல், தாங்கள் பெற்ற குழந்தையின் கழுத்திலே கத்தி வைத்துக் கொல்வோர் உண்டு. கவனமிருக்க வேண்டும், காவலரே!

மூன்றாமவன்: இளவரசி சொல்வது உண்மை — முக்காலும் உண்மை! என்னுடைய கடைசி குழந்தை நேற்றிரவு பட்டினியால் மடிந்தது. என்னிடம் பணமில்லை, அதனை எடுத்துப் புதைக்க.

புலி: நீ வறுமையில் உழல்கிறாய் என்றால், அது நீ பெற்ற பேறு—வறுமையில்தான் செம்மை நெறி தெரியும் என்கிறார்கள். வறுமையில்தான் கவிவாணர் நன்கு பாடுவர் என்கின்றனர். வறுமையில் தீ வழி திரும்பவும் முடியாது என்கின்றனர். (நல்லறிவாளரைப் பார்த்து) நீங்கள் அறிவீர்களே, இந்த நகரத்திற்குள்ளேயே, எவ்வளவு சத்திரம், சாவடி, அறநிலையங்கள் உள்ளன. சொத்து. சுதந்தரங்களைத் துறந்துவிட்டு, வறியனாக மாறிவருக—எனப் பிரச்சாரம் செய்வதற்கே, அவை உள்ளன. இந்த அறவுரை பரப்ப ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள்கூட அவைகள் பேரால் உள்ளன.

கு. கு: கருணை காட்டுங்கள் காவலா! நாம் எட்டடுக்கு மாளிகையின் உச்சியில்; தங்கக் கட்டில்களில் படுத்து தூங்கும்போது, அறநாட்டில் ஆயிரமாயிரம் பேர், ஓட்டைக் குடிசைகளில், தினந்தினம் சதிரவனும், நிலவும் வந்து வந்து போகும் கூரைக் கடியிலே, ஒன்றரைச் சாண் உள்ள கிழிந்த பாயில், கையே தலையணையாகப் படுத்துக் கிடக்கின்றனர். இன்னும் சிலர், அதற்கு வழியின்றி, ஆலமரத்தடியில், பாதைகள் ஓரத்தில், பாலங்களின் பக்கத்தில், படுத்துக் கிடக்கின்றனர். குளிரும் பனியும், குலை நடுக்கம் கொடுத்தாலும், அங்கேயே சுருண்டு கிடக்கிறார்கள்.

புலி: அவர்களின் முன் வினைப் பயன் அது. (நல்லறிவாளரைப் பார்த்து) மனத்திருப்தியோடு வாழ் என்பது தானே நமது மார்க்க போதனை. அப்படியானால் உள்ளதைக் கொண்டு உற்சாகப்படாமல், ஆசை அதிகமாகக் கொண்டு அலைகிறார்கள். அவன் பட்டினி கிடக்கிறான் என்றால், அது அவன் தலைவிதி. அதை நான் எப்படி மாற்ற முடியும்? நானா, உலகத்தை உண்டாக்கினேன்—இந்த உலுத்தர்களைப் படைத்தேன். ஆண்டவன்தானே — அவர் கவனிப்பார்! ஆண்டவனை நம்பாதவனே என்மீது குறை கூறுவான்.

முதல்வன்: மன்னன் இரும்பு இதயம் பெற்றவன்.

இரண்டாமவன்: சத்தமிடாதே, நமக்காக நல்லறிவாளர் பேசுகிறார்.

நல்: மன்னரே! துன்பங்கள் நேரும்போது தாங்கிக் கொள்வதுதான், மனித இயல்பு—ஆண்டவன் கட்டளையும் அதுதான். துன்பத்திலிருந்துதான் இன்பத்தைப்பிரிக்கிறார் ஆண்டவன். ஆனால் பிற உயிரிடம் அன்பு காட்டுவதும், அருளுடையவனாக நடப்பதும் ஆண்டவன் விரும்புவது. பட்டினி கிடப்பவருக்கு உணவு தருவதும், நோயுற்றவருக்கு மருந்து கொடுப்பதும், ஆடை இழந்தவருக்கு ஆடை தருவதும் — ஆண்டவன் நம்மிடம் எதிர்பார்க்கும் நல்வழிதான். ஆகவே, மன்னரே, அறவாழியில் அடங்கிக்கிடக்கும் அலங்கோலங்களைக் கண்டு, சீர்திருத்தம் செய்ய வேண்டியது, தங்கள் கடமை!

புலி: சீர்திருத்தம்—நல்லறிவாளரே, நீரா சொல்கிறீர் சீர்திருத்தம் என்று—அன்றொரு நாள் புத்தன் என்பான் நம் மதக் கொள்கைகளை சீர்திருத்த வேண்டுமென்றபோது, நம் மத அதிபதிகள் சீற வில்லையா? நாத்திகன் என்று சொல்லி நிந்திக்கவில்லையா?

பி: அவன், மந்தையிலிருந்து ஆடுகளைப் பிரித்து ஓட்டினான், தனி மந்தைக்கு. அப்படியல்ல, இப்பொழுதுகேட்பது; ஒரு மந்தையிலுள்ள ஆடுகளுக்கு உணவு தரச் சொல்கிறோம்.

புலி: நானே, அவர்கள் வாடுவதைக் கண்டால், உதவுவேன் ஆனால் இவர்கள் அடங்காப் பிடாரிகள்.

ஒருவன்: அப்படியா?

புலி: இந்தக் கந்தலாடைக் காரர்கள், வாய் நிறைய ராஜத்துரோகம் வைத்திருக்கிறார்கள்.

மற்றவன்: அப்படியானால் ஒரு கவளம் சோற்றால் எங்கள் வாயை மூடி விடுங்கள்.

புலி: நீங்கள், பலவித உணவுகளை உண்கிறீர்களே அது அல்ல முக்கியம். நீங்கள் நாவையடக்கி வைத்திருக்க வேண்டும். காலவேகத்தை உணருங்கள். பாவம் செய்தவரைப் பழிவாங்கவே பகவானால் அனுப்பப்பட்டவன் நான்.

கு. கு: அந்த உரிமை உங்களுக்கு இருக்கிறதா? நீங்கள் பாவமே புரிந்திடாத மனிதரா?

புலி: புண்ணியம் பாவத்தை விரட்டுவது சாதாரணம். பாவம், பாவத்தை விரட்டியடிப்பதுதான் கடவுளுக்கு மகிழ்ச்சியளிப்பது.

கு. கு: தங்கள் இரக்கமற்ற பேச்சு கேட்க, தங்கள் செவிகளுக்கே பயமாக யில்லையா?

புலி: நான் ஏன் பயப்படுகின்றேன்? கடவுளின் தூதுவன் நான். (கூட்டத்தினரைப் பார்த்து) எனது அருமைக் குடி மக்களே! எனது தங்கை குயில் குரலாள் கேட்டதற்கிணங்க, உங்கள்குறைகளை நீக்கத் தீர்மானித்துள்ளோம்.

முதல்வன்: வரிகளைக் குறைப்பார் மன்னர்.

புலி: என் மக்களே, அடுத்த வெள்ளிக்கிழமை மாலை, தாண்டவமூர்த்தி கோயிலில் நகரத் தலைவர் நல்லறிவாளர் அடக்கமுடைமைபற்றி அறிவுரையாற்றுவார். சென்று வாருங்கள்.

[மக்கள் முணுமுணுத்தனர். இந்த முடிவைக்கேட்டுத் திகைத்தனர்.]

முதல்வன்: வரட்டு வேதாந்தம் எங்களின் வயிற்றை நிரப்பாதே!

இரண்டாமவன்: உபதேசம், உண்ண வழிகாட்டாதே!

கு. கு: அறநாட்டு மக்களே, உங்களை வெறுங் கையராக வெளியில் அனுப்ப விரும்பவில்லை. எனது சொந்த நிதியிலிருந்து ஆளுக்குக் கொஞ்சம் தரச் சொல்கிறேன் — பெற்றுச் செல்லுங்கள்.

[அரசாங்கப் பொருள் காப்பாளன், நூறு பொற்காசுகளே, அவள் நிதியிலிருப்பதாக அறிவித்தான். அதனைப் பகிர்ந்தளித்தாள்.]

முதல்வன்: குயில் குரலாள் வாழ்க!

இரண்டாமவன்: இளவரசி குயில் குரலாள் வாழ்க!

கு. கு: இனி, ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும், தாண்டவமூர்த்தியார் கோயில் முன்பு, கஞ்சி வார்க்கப்படும். வறியவர் வரலாம்; வயிறார கஞ்சி பருகலாம்.

[கூடியிருந்த மக்கள் அனைவரும் ஆரவாரம் செய்தனர்.]

முதல்வன்: இளவரசி வாழ்க!

புலி: (மக்களைப் பார்த்து) வெளியேறி விடுங்கள். வீணாக காலங் கடத்தாதீர்கள். (அவர்கள் போகிறார்கள்) பெருநிலக் கிழார்களே! இந்த நாளில் புகழையும், கீர்த்தியையும் தேடும் முறை எனக்குத் தெரியும். மக்கள் ஆதரவில்லா விட்டால் நமக்கென்றும் அக்கரை கிடையாது! (குயில் குரலாளைப் பார்த்து) தங்கையே! மக்களிடையே புரட்சியை விதைக்கிறாய் - உன்னுடைய தானத்தாலும், தர்மத்தாலும், அவர்களின் புகழ்மொழிகளைக் கேட்கிறாய்—அவர்கள் அன்பு உனக்குக் கிடைத்திருக்கிறது!

ஆனால் தங்கையே, எச்சரிக்கிறேன் — தங்கையென்ற பாசத்தால், தாராளம் காட்டுகிறேன்-அந்தத் தாராளத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறாய் புலிவலன்! தனக்கு எதிராக எவர் வரினும், தங்கையேயாயினும், தாயேயாயினும் விடமாட்டான்—போ — அந்தப்புறத்தில் உன் பருவத்திற்கேற்ற வேலைகளில் ஈடுபடு! நல்ல கணவனைத் தேடுகிறேன்,

[இந்தக் காட்சி முழுவதையும் நகை முகத்தான் பார்க்கிறான். குயில் குரலாள் மீது பாசம் பிறக்கிறது. கொலு மண்டபம் கலைந்து முடியும் கடைசி நிமிஷம் வரை நிற்கிறான்.]

(தொடரும்)



விற்பனையாகிறது!

எழிலும் ஏற்றமும் துலங்கும் கலையுலக ஏடு

வெள்ளி வீதி

நவம்பர் 20-ம் தேதி இதழ்

மு. கருணாநிதி எழுதும்

"என்னைப் பற்றி..."

தொடர் கட்டுரையுடன்!

வெள்ளி வீதி, சென்னை—6.

★ 'பஞ்சசீலம்' பலிக்கவில்லை! ★

★ சூரணத்தால் சுகமில்லை!
★ வைத்தியத்தால் பலனுமில்லை!

அவர் ஒரு வயோதிக வைத்தியர்; அவரிடமிருப்பதோ ஒரே ஒரு சூரணம்!

ஊருக் கெல்லாம் நன்கு தெரியும்; அவர் உபயோக மற்றவர்; நாடிபார்க்க லாயக்கற்றவர் என்பது!

ஜில்லிட்ட பிரேதத்தின் கையைப் பிடித்துப் பார்த்து விட்டு 'இவர் இன்னும் இரண்டு வாரம் உயிருடனிருப்பார், பயப்படாதீர்'— என்று கூறி மருந்து எழுதிக் கொடுப்பார். அவ்வளவு பிரக்யாதி பெற்றது அவர் பின்பற்றி வரும் வைத்திய முறை!

இருந்தும் ஒரு சிலர் அவரது சூரணத்துக்கு மட்டும் தனி மதிப்பு வைத்திருந்தனர்.

ஜன்னி பிறந்தவருக்கு அந்தச் சூரணத்தைக் கொடுத்து விட்டால் போகிற உயிர் திரும்பி வந்து விடும் என்றனர் அவர்கள்!

னால் என்ன காரணமோ தெரியவில்லை; அந்தச் சிற்றூரில் உள்ளவர்கள் யாருக்கும் ஜன்னியே வரவில்லை; அதனால் அந்த வைத்தியரின் அந்தச் சூரணமே அவருடைய அபகீர்த்திக்குப் பாக்கு வைத்து விட்டது!

—இது போன்றதொரு கதை தான் இப்போது நடைபெற்றிருக்கிறது!

பண்டித நேரு—உள் நாட்டு விவகாரங்களிலே அவர் ஒரு உலுத்துப்போன மரம்!

வெளிநாட்டு விவகாரங்களிலும் அவர் அப்படித்தான் என்றனர், இந்த உபகண்டத்து முற்போக்கு இயக்கத்தவர்!

"இல்லை; இல்லை. அவரது வெளிநாட்டுக் கொள்கை பற்றி உங்களுக்குத் தெரியாது. பஞ்சசீலம் என்று அவர் ஒரு 'சூரணம்' வைத்திருக்கிறார். அதைச் சிறிது தேனில் குழைத்து ஜன்னி வந்தவர்களுக்குக் கொடுத்தால் ஒரு நொடியில் வியாதி பறந்து விடும்," என்று உபதேசித்தார்கள்,

கடைசியில் ஜன்னியும் வந்தது, ஹங்கேரி நாட்டில்!

யின் வீதிகளிலே வலம் வந்து கொண்டிருப்பதாகவும் ஏடுகளிலே படித்தோம்.

அப்போது உங்களுக் கெல்லாம் நினைவிருக்கும் பண்டிதர் ஹங்கேரியில் நடப்பனவற்றைக் கீழ்க்கண்டவாறு விமர்சனம் செய்தார்.

"ஹங்கேரியில் இப்போது நடப்பது தேசிய எழுச்சியே தவிர வேறெதுவுமில்லை."

ஆமாம்; ஹங்கேரியில் நடப்பது தேசிய விடுதலைக் கிளர்ச்சியின் ஒரு அத்தியாயம் என்றுரைத்தார், அவர்!

அதோடு நின்றாரா பண்டிதர்!

இல்லை; ஹங்கேரியில் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் வன்மையாகக் கண்டித்திருந்தார்!

கண்டனம் — இந்த ஒரு வார்த்தையில் பண்டிதர் ஹங்கேரிச் சம்பவங்களின்பால் நடக்கும் கலகங்களை அடக்குவதற்காக ஹங்கேரி அரசாங்கம் சோவியத் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள; அதனால் விளைந்ததாகும்!

—இது புல்கானினிடமிருந்து வந்த கடிதமொன்றைப் பெற்ற பிறது பண்டிதர் வகுத்துக் கொண்ட கொள்கையாகும்!

தேசிய எழுச்சி: கண்டனம்— என்ற விதத்திலே சென்ற நாக்கு புல்கானினிடமிருந்து கடிதமொன்று பெற்ற பிறகு—

- உள்நாட்டு விவகாரம்!
- சரியான பலம் வாய்ந்த தலைமை அங்கு இல்லாமையால் ஏற்பட்ட விளைவு!
- சோவியத் துருப்புகள் ஹங்கேரியில் நுழைந்திருப்பது ஒரு பலாத்கார சம்பவமல்ல; ஹங்கேரியின் சம்மதத்தின் பேரில்தான் செம்படைகள் அங்கே நுழைந்தன!

—இப்படி மாறியிருந்தது பண்டிதருடைய கொள்கை! அதாவது வெளிநாட்டுக் கொள்கையை ஒரு பச்சோந்தியாகக் கருதினோமானால் இது அதன் வர்ணம் நெ. 2.

'பச்சோந்தி'யா பண்டிதர் கொள்கை?

சூரணமும் சோதிக்கப்படாமல் கிடந்தது!

ரணம், வைத்தியரின் கைப் பைக்குள்ளேதான் கிடந்தது!

னால் அதைப் பற்றிய பேச்சோ ஊரெல்லாம் பிரபலமாயிருந்தது!

றுதியில் அந்த வேளை வந்தது; யாரோ ஒருவருக்கு ஜன்னி பிறந்தது!

வைத்தியர் அழைக்கப்பட்டார்; வைத்தியரோ சூரணத்தைத் திறந்தார்.

வருடைய பக்தர்கள் அனைவரும் ஆவலோடு எதிர்பார்த்தனர்; நேரம் வந்து விட்டது மருத்துவரின் மகத்துவம் ஊரெங்கும் ஒலிபரப்பப்படுவதற்கு! — என்று மகிழ்ச்சியில் ஊறிக் கிடந்தனர்.

டசியாக அந்தச் சூரணம் கொடுக்கப்பட்டது; என்ன ந்தை! வியாதியஸ்தர் பிழைத்தாரா?

லை; இல்லை. சூரணம் ள்ளே சென்ற ஒரு கணத்திற்குள் நோயாளி சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டிய நிலைமை ருஷ்டிக்கப்பட்டது!

ணத்தில்தான் இருக்கிறது, ன்வந்திரியின் கீர்த்தி என் ர்கள். பாவம், அன்றோ

அந்தோ பரிதாபம்! அங்கேதான் 'பஞ்சசீலம்' என்ற பண்டிதரின் சூரணமும், வெளிநாட்டுக் கொள்கை என்ற அவரது வைத்திய முறையும் முற்றிலுமே தோற்றுப் போனது!

வேளைக்கு ஒரு விதத்திலே, நாளுக்கு ஒரு தன்மையிலே அவரது வெளி நாட்டுக் கொள்கை 'குட்டிக் கரணம்' போட ஆரம்பித்து விட்டது!

அந்த விதத்திலே ஒரு பச்சோந்தி போல அவரது வெளிநாட்டுக் கொள்கையின் வர்ண ஜாலங்கள் தோன்றித் தோன்றி மறைந்திருக்கின்றன!

ஆமாம்; அவரது பஞ்சசீலம் தோற்றிருக்கிறது! அவர் எந்த வைததிய முறைக்குப் பெயர் பெற்றவர் என்று கருதப்படுகிறாரோ; அந்த வெளிநாட்டுக் கொள்கை என்னும் வைத்திய முறையிலேயே அவர் படுதோல்வி அடைந்திருக்கிறார்!

இதோ அந்த விபரங்கள்:

● ● ● ஹங்கேரியிலே பொது மக்கள் கலகம் செய்வதாகப் பத்திரிகையிலே கொட்டை எழுத்துக்களிலே செய்திகள் வந்தன!

அதை அடக்குவதற்கு சிற்றெறும்பு வரிசைபோல் அணி அணியாக செம்படை ரஷ்யாவிலிருந்து ஹங்கேரிக்குள் நுழைந்து விட்டதாகவும், ரஷ்ய 'டாங்கு'கள் ஹங்கேரி கொண்டிருந்த கொள்கையைச் சுட்டிக் காட்டலாம்!

இதே கொள்கையாவது இறுதிவரை — இன்றுவரைக் கடைப்பிடிக்கப்பட்டதா?

பிறழாத நாக்குகொண்டவர் இந்திய உபகண்டத்தின் முதலமைச்சர்—என்ற நல்ல பெயரினையாவது பண்டிதர் காப்பாற்றிக்கொண்டாரா?

அதுவும் இல்லை!

ஹங்கேரிச் சம்பவத்துக்காக அனுதாபம் தொனிக்கும் விதத்தில் பேசியவர்; ஹங்கேரி மக்களை ஒடுக்குவதற்காக செம்படைகள் நுழைந்திருப்பதை எதிர்க்கின்ற பாணியிலே பேசிக் கொண்டிருந்தவர்; பிறகொரு நாள் திடீரென்று மாறினார்!

"ஹங்கேரியில் நடப்பதெல்லாம் உள் நாட்டு விவகாரங்கள்!"

○

இந்த உள் நாட்டு மோதல் ஹங்கேரியில் தகுந்த பலமுள்ள தலைமை இல்லாத காரணத்தால் ஏற்பட்டதாகும்! அதனால் அது வார்சா ஒப்பந்தப்படி அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சோவியத்தின் ஆயுதமேந்திய படைகளை அங்கே நுழையும்படிச் செய்து விட்டது.

ஆகவே சோவியத்தின் பிரவேசமானது ஹங்கேரியில்

சரி: இந்த முடிவையே இறுதி வரை கொண்டிருந்தாரா பண்டிதர்?

இரண்டு வர்ணங்களைக் காட்டுவதோடாவது நின்றிருந்தாரா?

இல்லை.

நவம்பர் 19-ம் தேதியன்று இதற்கு முற்றிலும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார், பாராளுமன்றத்திலே!

எகிப்திலிருந்தும், ஹங்கேரியிலிருந்தும், அந்த இரு இடங்களிலிருந்தும் அந்நியத் துருப்புகள் வாபசாக வேண்டும்.

●

சென்ற இருபது நாட்களாக மக்கள் அங்கே சாத்வீக மறுப்பு செய்து வருகின்றனர். அது பிறர் தூண்டின கலகமாயிருந்தால் சாத்வீக எதிர்ப்பு இவ்வளவு கடுமையாக இருக்காது.

●

ஹங்கேரியில் இப்போது மக்களின் விடுதலைப் போராட்டம் என்பதில் சிறிதளவும் சந்தேகம் கிடையாது...கடும் ஆயுத பலத்தால் அவர்கள் ஒடுக்கப்பட்டும்கூட அவர்களது சாத்வீக எதிர்ப்பு ஒன்றே அது மக்கள் இயக்கம் என்பதை நிரூபித்திருக்கிறது.

—இது பண்டிதருடைய

※ தொடர்ச்சி 10-ம் பக்கம்

அந்தோ 'தசாவதாரங்கள்!'

❋ 4-ம் பக்கத் தொடர்ச்சி

பிறகு அவர் குருசாமியைப் பார்த்து, நாடகத்தைப் பற்றிய தமது அபிப்பிராயத்தைக் கூறுவதற்குப் பதிலாக மேற்படிச் சம்பவத்தைக் கூறி "என் சமையற்காரன்கூட நாடகத்திற்கு வந்துவிட்டான்; பாட்டாளியின் பணம் போகிற போக்கைப் பார்த்தீர்களா?"-என்று கேட்கலாம்!

அதனால்தான் நாளை 'தசாவதாரம்' பார்க்கப்போக வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கெல்லாம் கூற விரும்புகிறோம்; இப்போது 'விடுதலை'யார் எழுதியிருக்கும் தலையங்க வாசகங்களையே திருப்பிச் சொல்ல விரும்புகிறோம்.

அன்புள்ள தோழர்களே! முட்டையும் பாலும் அருந்த வேண்டிய பணத்தை நாடகக் கோட்டகைகளில் கொட்டிப் பாழாக்கக் கூடாது; இது மடமை மட்டுமல்ல; குடும்பத்துக்குச் செய்கின்ற கொடுமையுமாகும்!

"என்னய்யா இது; சிறிதும் வெட்கமில்லாமல், முன் யோசனையில்லாமல், 'விடுதலை' வாசகர்கள் அனைவரையும் மரமண்டைகளாக நினைத்துக் கொண்டு குருசாமியார் மூன்றுகை தலையங்கத்தையும், விளம்பரத்தையும் எழுதிக் கொடுத்திருப்பாரா?"-என்று கேட்கத் தோன்றும்.

இது நியாயமான கேள்விதான்! இதற்கும் ஒரு விளக்கம் இருக்கிறது.

19—11—56 அன்று விடுதலையின் கடைசிப் பக்கத்திலே வந்திருக்கும் விளம்பரத்தைப் பெரியார் அவர்கள் பார்த்திருக்கலாம்; அல்லது குருசாமியார் 'தசாவதாரம்' நாடகம் எழுதி, அது ஏராளமானபொருட் செலவில் தயாராவதையும்அவர் கேள்விப் பட்டிருக்கலாம்.

ஏராளமான பொருட் செலவில் ஒரு நாடகமா?

—இந்தக் கேள்வி அவர் மனதில் உதயமாகியிருக்கும்!

அதனால்தான் அதைக் கண்டிக்கும் விதத்திலும், விலைவாசிகள் உயர்ந்திருக்கும் இந்த நேரத்தில் பொது மக்களைப் பொழுது போக்கிற்குப் பணத்தைச் செலவிடும்படித் தூண்டுவது தவறு என்ற நம்பிக்கையிலும் அவர் ஜாடையாக இப்படி எழுதியிருக்கலாம்!

அதனால்தான், 'விடுதலை' வாசகர்களே! மீண்டுமொரு முறை அந்த அறிவுரையை நினைத்து செயலாற்றுங்கள்:

"...எனவே மக்கள் இத்துறையில் திருந்த வேண்டும்; முட்டையும் பாலும் அருந்த வேண்டிய பணத்தை சினிமாக் கொட்டகையில் (அல்லது 'தசாவதார' நாடகக் கோட்டகையில்') கொட்டிப் பாழாக்கக் கூடாது; இது மடமை மட்டுமல்ல; குடும்பத்துக்குச் செய்கின்ற கொடுமையாகும்!"

('விடுதலை'—தலையங்கம்— 20—11—56.)

ஃ

பஞ்சசீலம்....

❋ 9-ம் பக்கத் தொடர்ச்சி

பார்லிமெண்ட் பேச்சின் சாரம்!

முதலில் ஹங்கேரியில் நடப்பது—

உள்நாட்டு விஷயம்!

அங்கே ஹங்கேரியின் விருப்பத்தின்படிதான் ரஷ்யப்படைகள் வந்திருக்கின்றன.

—என்றெல்லாம் கூறியவர், பாராளுமன்றத்தில் கூறியிருப்பது என்ன?

● அங்கே அன்னியத் துருப்புகள் நுழைந்திருக்கின்றன; அவை வாபசாக வேண்டும்!

● ஆயுத பலத்தால் அவர்கள் ஒடுக்கப்படக்கூடாது!

—இது அவரது கருத்துக்கள்; 19-ம் தேதிவரை!

முன்பு உள்நாட்டு விஷயம் என்று குறிப்பிட்டவர் இப்போது ஹங்கேரி விவகாரத்தையும், எகிப்து விவகாரத்தையும் ஒப்பிடுகிறார்!

முன்பு ஹங்கேரியின் வேண்டுதலின் பேரில்தான் ரஷ்யப் படைகள் அங்கு நுழைந்திருக்கின்றன — என்றுகூறி; அது தவறல்ல என்பதுபோல் பேசியவர், இப்போது அன்னியப் படைகள் நுழைந்திருக்கின்றன என்று குற்றஞ் சாட்டுகிறார்.

இது நேருவுடைய பச்சோந்திக் கொள்கையின் வர்ணம் நெ. 3!

●●● பண்டிதருடைய பாராளுமன்றப் பேச்சின்படி; ஹங்கேரி என்கிற சுதந்திர நாட்டில் சோவியத் ரஷ்யாவின் படைகள் (அதாவது அன்னியப் படைகள்) நுழைந்திருக்கின்றன!

●● ஆனால் இதற்கு முன்பு ஒன்றை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்!

புல்கானின் முன்பு இந்தியா வந்தபோது அவர் நேருவுடைய கொள்கையை ஒப்புக்கொண்டு அதில் கையெழுத்தும் போட்டுச் சென்றிருக்கிறார்!

●● அந்தப் பஞ்சசீலத்தின் தலையாய ஷரத்து என்ன தெரியுமா?

ஒரு நாடு இன்னொரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக்கூடாது—என்பதுதான்!

ஆனால் இப்போது நடந்திருப்பது என்ன?

அந்தப் பஞ்சசீலத்துக்கே குழிதோண்டிப் புதைக்கப்பட்டிருக்கிறது!

எந்தப் பஞ்சசீலத்தில் கையெழுத்துப் போட்டாரோ; அதே புல்கானின் இப்போது ஹங்கேரியின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டிருக்கிறார்—அல்ல; அல்ல; படையெடுத்திருக்கிறார், பண்டிதரின் வாசகப்படி!

●● அப்படியானால் பஞ்சசீலம் என்பது என்ன?

அது ஒரு 'ஆட்டோகிராப்' புத்தகம்; பெரிய மனிதர்கள் யாராவது டெல்லிக்கு வந்தால் நேரு 'மாமா' அதில் கை யெழுத்து வாங்கி அழகு பார்த்துக் கொள்கிறார்!

—இந்த வாசகங்கள்தான் மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப் படுகின்றன!

●●● பாவம்! வைத்தியம் பார்க்கும் பண்டித நேருவிடம் ஒரே ஒரு சூரணம்தான் இருந்தது. அந்தோ பரிதாபம்; அது இப்போது பலிக்காமற் போய், அவரது 'பவிசு'தனை வெளியிட்டது. உண்மையிலேயே அவரை இரங்கத்தக்க நிலையிலேதான் வைத்திருக்கிறது!

❋

பிறைவானம்....

❋ 11-ம் பக்கத் தொடர்ச்சி

மாகத்தான் இருக்கும் அதில்! அவர் எண்ணிப் பார்க்கவே இல்லை; அதற்கேது நேரம்? "தருமு! தருமு'!" என்று பிதற்றிக் கொண்டே அறையை விட்டு வெளியே ஓடி வந்தார்.

அதே சமயம்...

கூரிய கத்தி ஒன்று வாசற் கதவிலே 'சதக்' கென்று பாய்ந்தது—முன்னைப் போலவே, ஒரு கடிதத்துடன்.

அஞ்சலை தாவி எடுத்தாள்; படித்தாள்.

"மருதவாணரே! உங்கள் மகன் உங்களிடமே வருகிறான். எனக்குப்பணமும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம்! அவனை வைத்துக் கொண்டு இனிமேல் என்னால் சமாளிக்க முடியவே முடியாது.

—பூபதித் தேவன்"

மருதவாணர், அஞ்சலை-இருவர் கண்களும் ஆச்சரியத்தால் அகல விரிந்தன.

அதன்பிறகு சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கு தருமு வந்து சேர்ந்ததையும்—மகனைக் கண்ட மகிழ்ச்சியில் மருதவாணர் 'ஒரு சுற்று' பெருத்து விட்டதாக உணர்ந்ததையும்—காட்டின் விநோதத்தை தருமு தன் மழலைச் சொற்களால் வர்ணித்துக் கொண்டிருந்ததையும் விட — மிக மிக முக்கியமான ஆச்சரியமான—மகிழ்ச்சிகரமான செய்தியைச் சொல்லுகிறேன்—

"நான்பெற்ற மகனே!" என்று அஞ்சலை தருமுவை அணைத்துக் கொண்டாள்!

—'சொர்ணம்'

(முற்றிற்று)

கூடாது இந்த...

❋ 2-ம் பக்கத் தொடர்ச்சி

போக்குவரத்துகூட இப்போது தடை செய்யப்பட்டுவிட்டது.

ஏன்?

தென் ஆப்பிரிக்காவின் நிற வெறித் திமிரைக் கண்டிக்கு முகத்தான் இந்தியா அந்த நடவடிக்கையை எடுத்துக் கொண்டது.

இன்றும் அதே போன்றதொரு சர்பவம்தான் நடைபெற்றிருக்கிறது.

ஆப்பிரிக்காவின் ஜோதியாக; அரபு நாடுகளுள் பரிதியாக விளங்கும். நாசர் கொடுமைப் படுத்தப் பட்டிருக்கிறார்.

அவரது தலைமையின் கீழ்ச் செல்லும் எகிப்து புதுக் கருத்துக்களைக்கொண்டிருப்பது காரணமாக அதன் தலையில் அநீதி இடியென விழுந்திருக்கிறது.

ஆப்பிரிக்காவின் நிறவெறியைக் கண்டித்த இந்தியா பிரிட்டனின் ஏகாதிபத்திய வெறியைக் கண்டிக்க வேண்டாமா?

அதற்கு; காமன்வெல்த்திலிருந்து விலகுவதைத் தவிர வேறு தகுந்த வழி என்ன இருக்க முடியும்?

●●● அப்படி இன்று காமன்வெல்த்திலிருந்து விலகுவது உணர்ச்சி வசப்பட்ட செயல் என்று கருதப்படுமானால்;

முன்பு தென் ஆப்பிரிக்காவுடன் உறவு முறைகளைக் கத்தரித்துக் கொண்டதையும் உணர்ச்சி வசப்பட்ட செயல் என்றுதான் கொள்ள வேண்டும்!

ஆனால் பண்டிதர் அதை ஒருக்காலும் தவறென்று கூற மாட்டார்.

●●● அப்படியானால் பண்டிதர் காமன்வெல்த்தில் இணைந்திருப்பதற்கு அவ்வளவு முக்கியத்துவம் ஏன் கொடுக்க வேண்டும்?

இதோ அந்த ரகசியம்:

பண்டிதர் கல்கத்தா காங்கிரசில் பேசும் போது; பாராளுமன்றத்தில் பதில் கூறும் போதும் குறிப்பிட்டார்:

காமன்வெல்த்தில் இந்தியா இருப்பதன் மூலம் அது சமாதானத்துக்காக நல்ல முறையில் பணி புரிய முடியும்!

காமன்வெல்த்தில் இருப்பதன் மூலம் சமாதானத்துக்குப் பணிபுரிய முடியுமாம்.

எவ்வாறு?

விளக்கம் தரவில்லை பண்டிதர்!

ஆனால் அந்த விளக்கம் விஷயமறிந்தவர்களுக்குப் புரியாமலா போய்விடும்?

●●● காமன்வெல்த்தில் ஒட்டிக்கொண்டிருப்பதால் தான் நேருவுக்கு இங்கிலாந்தில் மதிப்பு இருக்கிறது!

● பண்டிதர் மாபெரும், வீரத்தலை வீரராக இருக்கலாம்

❋ தொடர்ச்சி 12-ம் பக்கம்

விலை

சென்ற இதழ் தொடர்ச்சி

தீப்பிடித்த குடிசைக்குள்ளே இவிட்ட பூபதியின் அலறல், ர்த்திகை 'சொக்கப்பானை' ால் திகுதிகு என்று எழும் கொண்டிருந்த தீயைக் ண்டு கைதட்டிக் களித்துக் ாண்டிருந்த தருமுவின் தில் விழுந்திருக்குமா என் து சந்தேகமே! தாளிடப் ட்டிருந்த கதவை 'படபட' ன்று தட்டினுன் பூபதி. லனே இல்லை!

தருமு சிரித்துக் கொண்டிருந் ன். "ஐயோ! தருமு! நான் சத்துவிடுவேன் தம்பி!"

தருமுவின் சிரிப்பு உடனே ன்றது. "செத்துவிடுவேன் ம்பி!"—இந்த வாசகத்தை வன் இதற்கு முன்பே கேட் ருக்கிறுன். ஆமாம்; அவனைப் பற்ற அன்னை இப்படித்தான் ரு நாள் சொன்னுள், அவள் டுக்கையிலே கிடந்தபோது. அன்னை தட்டுத் தடுமாறிச் சொன்ன அந்த அழுகுரலுக்கு தருமுக்கு அப்போது பொருள் புரியவில்லை. ஆனுல்......மறு தினம் அவன் அம்மா இறந்து போனுள்; அதன் பிறகு அவன் தன் அன்னையைக் காணவே முடியவில்லை. அந்த நினைவு அவனுக்குத் தோன் றியது. இதோ, பூபதியும் அப் படித்தான் கத்துகிறுன்'செத்து விடுவேன் தம்பி!' என்று. ஐயையோ!.....அப்படியானுல் அந்த மாமாவையும் இனிமேல் சந்திக்க முடியாதா?'—தருமு வின் முகத்தில் — உள்ளத்தில் ஒரு திடீர் மாற்றம் நேர்ந்தது. அவன் சிரிப்பு சிதறி மறைந் தது. மறுகணம் 'குபீர்' என்று பாய்ந்தான். எரிந்து கொண் டிருந்த குடிசையை நோக்கி ஓடினுன்.

பூபதி கதவைத் தட்டிக் கொண்டே இருந்தான். தீ யுக்கு மத்தியிலே புகுந்து ஓடிய தருமு அவசர அவசரமாக தாழ்ப்பாளைத் திறந்துவிட் டான். "மாமா! மாமா! ஓடி வா! ஓடிவா!" என்று கத்தி ஞன். பூபதி இதை எதிர்பார்க் கவே இல்லை. ஒரு கணம் அவ னுக்கு எதுவுமே புரியவில்லை; மறு கணம் உள்ளே பாய்ந்த தருமு, அவனது கையைப் பிடித்து பரபர வென்று இழுத் துக் கொண்டு வெளியே வந் தான். பூபதிக்கு அப்போது தான் 'உயிர்' வந்தது. களைப்பு தாளாமல் மரத்தடியில் உட் கார்ந்து விட்டான்.

தருமு பக்கத்திலே அமர்ந் தான். "மாமா! நான் வந்து கதவைத் திறக்கலேன்னு நீ செத்துப் போயிருப்பீல்ல...? இப்படித்தான் மாமா என் அம்மா கூட..." என்று பேசிக் கொண்டே போனுன் தருமு.

அதே சமயம் பூபதியின் உள் ளத்தில், அந்நேரம்வரை அவன் மறந்திருந்த ஒரு நினைவு திடீ ரென்று எழுந்தது.

ஆமாம்; அன்றுதான் தரு முவைத் திருடிவந்த பத்தாவது தினம்!

அன்று தான் நச்சுமலை உச் சிக்கு அவன் தருமுவுடன் செல்ல வேண் டிய நாள்!

அந்த தரு முக்காகரூபாய் பத்தாயிரம் காத்திருக்கும்!

பூபதிக்கு உடனே அங்கு செல்ல வேண்டு மென்ற எண் ணம் தோன்றியது. அப்படிப் போவதற்கு இப்போது பணம் மட்டும் அவனுக்குக் குறிக் கோளாக இல்லை. பத்து நாட் களுக்கு முன்பு வேண்டுமானுல் —தருமுவுக்கு விலை வைத் தானே, அந்த நேரத்தில்—அவ னுக்குப் பணம் பிரதானமாக இருந்திருக்கலாம்; ஆனுல் இன்றோ—அவன் தருமுவை எப்படியாவது தன்னிட மிருந்து 'தொலைத்து'விடவேண் டுமென்று முடிவு செய்திருந் தான். அவனைப் பொறுத்த வரையில் மகிழ்ச்சிக்குரிய செய லாக அது இருந்தது. தருமு செய்த தொல்லைகள் கொஞ் சமா, நஞ்சமா? அவனைக் காப் பாற்றபூபதிஎடுத்துக்கொண்ட அக்கரையும், அதன் பலனுக அனுபவித்த வேதனைகளும் சொல்லும் தர மல்லவே!

அந்தப் பத்து நாட்கள் பத்து வருட கால தொல்லை மிக்க வாழ்வாக அவன் அனுபவித்திருந்தான் தருமுவைக் குற்ற வாளிஎன்றும் அவன் சொல்ல முடியாது. வளரும் பருவம்–வாழ்வின் இன் பதுன்பங்கள் எத்தகையவை என்பதை பகிர்ந்தறிய முடி யாத குழந்தை – இல்லாவிடில் தீய நோக்கமாக அவனை அழைத்து வந்த பூபதியையே "மாமா! மாமா!" என்று அன் பொழுக அழைப்பானு?

பூபதி வேகமாக எழுந்தான். தருமுவின் கையைப் பற்றினுன். நச்சு மலையை நோக்கி வேக வேகமாக நடந்தான். "எங்கே மாமா? எங்கே மாமா?" என்று கேட்டுக் கொண்டு வந்த தருமு வின் குரலைக்கூட அவன் லட்சி யம் செய்யவில்லை.

நச்சு மலையை அடைந்தான். அவன் கண்கள் பணமுடன் வந்திருக்க வேண்டிய தருமு வின் தந்தையைத் தேடின. ஆனுல் அங்கு யாருமே இல்லை. "மாமா! யாரை மாமா தேடுறே?" என்றுன் தருமு.

"எல்லாம் உன் அப்பாவைத் தான்!" என்றுன் பூபதி!

"அப்பாவையா? என் அப் பாவையா? ஏன் மாமா? எதற் காக மாமா? அவர் இங்கே வரமாட்டாரே?"—இத்தனை கேள்விகளுக்கும் ஒரே பதில் சொன்னுன் பூபதி!

"வராமலா போவார்? நான் தான் கடிதம் எழுதியிருக் கிறேனே, கதறிக் கொண்டு ஓடிவந்து என் காலில் விழுகிற மாதிரி...!"

"என் அப்பா வுக்கா கடிதம் எழுதினே மாமா?......" என்றுன் தருமு.

'ஆமாய்!.....'

மறு கணம் தருமு 'கொல்' லென்று சிரித் தான். என்ன வென்று புரி யாத பூபதி அவன் முகத் தை வினுக் குறியுடன் பார்த்தான். "ஐயோ மாமா! என் அப்பாவுக்குப் படிக்கவே தெரியாதுங்கறது உனக்குத் தெரியாதா?..." என் றுன் தருமு.

பூபதிக்கு திக்கென்றது. அவ னது முயற்சி விரயமானதா கவே அவன் நினைத்தாள்.

அவன் காத்திருந்து என்ன பலன்? தருமுவைப் பார்த் தான். மரத்தின் மேல் உட் கார்ந்து கொண்டிருந்த குரங்கை நோக்கி கல்லெடுத்து வீசிக்கொண்டிருந்தான் அவன். குரங்கு அவனை நோக்கி 'உர்ர்...உர்ர்...' என்று சீறியது. அதைக் கண்டு பயந்த தருமு ஓடிவந்து பூபதி யின் மேல் வேகமாகச் சாய்ந் தான். சாய்ந்த வேகத்தில் பூபதி கீழே விழுந்தான்.

தட்டுத் தடுமாறிக் கொண்டு எழுந்தபோது "அப்பப்பா!... என்ன தொல்லை யப்பா இவனுலே..." என்று முணுமுணுத் தது அவன் வாய்! ஆனுல் அப்போது அவன் உள்ளத்திலோ என்ன செய்வது—என்ற வினுக் குறி எழுந்து நின்று வதைத்துக் கொண்டிருந்தது.

அவன் யோசித்தான். யோச னையின் எல்லையில் முடிவொன் றும் செய்தான். அந்த முடிவு சரிதானு என்று மீண்டும் யோசித்தான். 'அதுதான் உகந்த வழி!' என்று ஆமோ தித்தது அவனது உள்ளம். அந்த முடிவை அவன் செய லாற்றத்தான் வேண்டும். அதை விட்டால் வேறு வழியே இல்லை...!

அவன் அந்தப் புதிரான முடி வுக்கு வந்த அதே நேரத்தில், பயங்கர அமைதியோடு–இடை இடையே பரிதாப அலற லோடு—அன்பும் அருளும் அழிந்து–கொலை விழுந்த இடம் போல் தோன்றும் மருதவாண ரின் மாளிகையை நோக்கி நாம் கொஞ்சம் சென்றுக வேண்டும்!

இருளடைந்த குகை— வௌவால் அடைந்த குடிசை— இவைகளைவிட கோரமான நிலை யில் காட்சியளித்தது அந்த மாளிகை!

ஊரெங்கும் வலை போட்டுத் தேடினுர்; போலீசிலே புகார் செய்தார்; பத்திரிகையிலே அறிக்கை தந்தார்; அக்கிரம மாய் மறைந்துபோன அன்பு மகனுக்காக! கிடைக்க வில்லை என்றுல் எந்தத் தந்தையின் மனம்தான் அமைதியாக இருக் கும்? "தருமு! என் தருமு! எங்கேடா போனுய்? என்னை ஏன்டா தவிக்க விடுகிருய்?" என்று தன் அறையிலே படுக் கையில் புரண்டு புலம்பிக் கொண்டேயிருக்கிருரே அந்த மருதவாணர். அவர் மட்டும் அந்த வேதனையை எப்படிப் பொறுப்பார்? பிரமை பிடித்த வரைப்போல் இருப்பார்— ஊமை போல! வெறி பிடித்த வரைப்போல கத்துவார்–பைத் தியக்காரனைப் போல! பெற்ற மனம் ஊண் மறந்தது; உறக் கம் மறந்தது; விளைவு...? உரு மாறினுர் மருதவாணர்! எலும் பும் தோலுமாய் தீரா நோயில் சிக்கியவரைப் போலக் காட்சி யளித்தார்!

அடுப்பங்கரையிலே உட் கார்ந்து கொண்டிருந்த அஞ்ச லையின் காதுகளில் "தருமு!... என் தருமு!" என்ற மருதவா ணரின் கதறல் விழுந்தது.

அஞ்சலையின் கண்களில் கண் ணீர் துளிர்த்தது. அதுபுகை யின் விளைவல்ல! ஆம்; இத் தனைக் கொடுமைக்கும் அவள் தானே காரணம்? கணவரின் அலறலை அவளால் இனியும் சகிக்கமுடியாது; அதன் விளைவு தான் அவளையும் மீறிய அந்தச் கண்ணீர்!

மருதவாணர் மீண்டும் கத்தி னுர்! அஞ்சலை கைகளைப் பிசைந்து கொண்டாள். என்ன இருந்தாலும் பெண் மனம் அல்லவா—பத்து நாட்கள் சகிக்க முடியாது அவள் அனுப வித்த வேதனை. அவள் நெஞ் சிலே ஆழப் புதைந்து கிளை பல விரித்து, வளர்ந்து கிடந்த பொருமை மரத்தை, ஆணி வேரோடு கெல்லி எறிய ஆரம் பித்து விட்டது! அவள் தடு மாறினுள்; அன்று பத்தாவது நாளல்லவா! இதை எண்ணிய தும் அவள் திடுக்கிட்டாள்.

மருதவாணரின் அலறல் மீண் டும் எழும்பியது. அஞ்சலை ஓடினுள். மருதவாணரின் அறைக்குள் நுழைந்தாள்.

மறு கணம்...

தன் ஆசை மகனின் அன் றைய நிலையை—பத்து நாட்க ளாக அஞ்சலையின் பொருமை நெஞ்சத்திலே புதைந்து கிடந்த மாபெரும் உண்மையை— அறிந்த மருதவாணர் "அடிப் பாவி!" என்று அலறினுர்.

"சீக்கிரம் போங்கள்! இன்று தான் கடைசி நாள்! இதுதான் கடைசி நேரம்! சீக்கிரம் போங் கள்!!" என்று துரிதப் படுத் தினுள் அஞ்சலை!

மருதவாணர் படுக்கையை விட்டு எழுந்தார். இரும்புப் பெட்டியை நோக்கி ஓடினுர். கதவை அவசர அவசரமாகத் திறந்தார். ஒரு கத்தை 'கரன்சி' நோட்டுகளை அள்ளினுர். ஆமாம்; அவர் மகனுக்கு விலை யான பத்தாயிரத்தை விட பல ஆயிரம் ரூபாய்கள் அதிக

❋ 10–ம் பக்கம் பார்க்க

சோலையப்பன்; விருதுநகர்.

(?) கவர்னராகப் போகும் ஜான் அவர்களுக்கு திருமதி உண்டா?

அது என்னமோ தெரியாது; ஆனால் அவருக்கு பச்சைத் தமிழரிடமிருந்து வெகுமதி உண்டு என்பது மட்டும் நிச்சயம்!

சங்கரராமலிங்கம்; திருநெல்வேலி.

(?) வினோபா பாவே ஒருநாள் காரில் சவாரி செய்யவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டதாமே!

அதனால் என்ன; பல்லக்கு கொண்டு வரச் சொல்லி, அதில் ஏறி பிரயாணம் செய்யாமல் காரில் சென்றாரே; அது போதாதா!

பு. க. பழனியப்பன்;

புள்ளிச்சவுண்டன்பாளையம்.

(?) நான் தி. மு. க. அங்கத்தினராகச் சேர வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்?

இன உணர்வு பெற வேண்டும்; இன உணர்வு பெற வேண்டும்!

கே. மாரிமுத்து; தஞ்சை.

(?) முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் சவப் பெட்டியைத் தாங்களே சுமந்து செல்லப் போவதாக குருஷேவ் பேசியிருக்கிறாரே: அது பற்றி உங்கள் கருத்து என்ன?

அது எந்த அளவுக்கு உண்மையாக இருந்த போதிலும் இந்திய கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் சவப் பெட்டியை அவரே சுமந்து சென்றிருக்கிறார்—என்பது மட்டும் கண்ணுக்குத் தெரிந்த உண்மை!

வி. கே. கோவிந்தசாமி; தில்லை.

(?) சாவுக்கு பயப்படாதவர்கள் எங்கே இருக்கிறார்கள்?

ஹங்கேரியில் தினம் தினம் செத்துக் கொண்டிருப்பவர்கள் அவர்கள்தானே!

சோமசுந்தரம்; நாகை.

(?) அதிர்ஷ்டம் என்பது என்ன?

முடியாதவர்கள் பிறருடைய வெற்றிக்கு இடும் பெயர்தான் அது!

வி. பழனிச்சாமி; சிங்காநல்லூர்.

(?) நீங்கள் தேர்தலுக்கு நிதி திரட்டுவதுபோல காங்கிரஸ் கட்சியும் ஏன் நிதி திரட்டவில்லை?

நிதி படைத்தோரே அவர்கள் பக்கமிருக்கும்போது அவர்கள் ஏன் தோழரே நிதி திரட்டவேண்டும்! ஒருமுறை காமராசர் கோவை சென்று வந்தால் பல லட்சங்களுடன் திரும்பி வந்துவிடுவாரே!

எல். கோதண்டராமன்; கரூர்.

(?) விதி என்பது என்ன?

நடக்கக் கூடிய செயலுக்கோ; நிகழ்ச்சிக்கோ நம்ப முடியாத சக்தியை இணைத்துச் சொல்வதுதான் விதி!

ஆர். எஸ். வெங்கடாசலம்;

பண்ணைக்காழி.

(?) தென்னக வீட்டின் திறவுகோல் யாரிடமிருக்கிறது?

அது பூட்டப்பட்டிருந்தால் அல்லவோ திறவுகோலின் அவசியம் தேவைப்படும். அதுதான் நாய் நுழையும் திறந்த வீடு போல் யார் நுழைவதையும் தடுத்து நிறுத்த முடியாமல் கிடக்கிறதே!

எஸ். கே. வீராசாமி; மாயூரம்.

(?) கடவுள் மனிதனைப் படைத்தால்; அந்தக்கடவுளைப் படைத்தது யார்?

தெரியவில்லையா; மனிதன் கடவுளைப் படைத்தான்!

வி. சம்மந்தம்; சென்னை-1.

(?) காதலுக்குக் கண் இல்லை—என்கிறார்களே; அது எப்படிப் பொருந்தும்?

அதற்கு மூளையே கிடையாது என்று சொல்லும்போது நீர் இதைச் சொல்ல வந்து விட்டீரே!

கோமேதக வேல்; அலிசாவெள்ள.

(?) பெரியாரும் நேருவும் சேர்ந்தால் திராவிடக் கழகம் என்ன ஆகும்?

பெரியாருக்குப் பிறகு நடக்க இருப்பது அவர் இருக்கும் போதே நடந்து விடும்!

வே. பூங்காவனம்; வேலூர்

(?) இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திட்டுவதற்கு சென்னை சர்க்கார் எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள்?

அப்படி ஒரு தொகை ஒதுக்கப்பட்டு. அதற்கு திராவிடக் கழகத்தினரும் நிதி திரட்டித் தந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை, நண்பரே!

கா. மாணிக்கவாசகம்;

ராமநாதபுரம்.

(?) காங்கிரஸ் கூடாரத்தின் பணியால் இந்த நாட்டில் சமரசம் அரும்ப முடியுமா?

முடியாது; ஏனெனில் பல சமையற்காரர்கள் சேர்ந்து அந்த 'ரசத்'தைக் கெடுத்து விட்டார்களே!

கூடாது! இந்த...

❊ 10-ம் பக்கத் தொடர்ச்சி

உள்நாட்டிலேயுள்ள சமஸ்தானாதிபதிகளையும்; சிற்றரசர்களையும் ஒழித்துக் கட்டியவராக இருக்கலாம்.

❊ இருந்தாலும் அவர் பிரிட்டிஷ் ராணியாருக்குப் பணிந்து கொடுக்கும் பண்பாளர்—என்கிற நிலைமை வரும்போதுதான் பிரிட்டனின் பெரிய புள்ளிகள் அவருக்கு விசேஷ கௌரவங்களைத் தருவதற்கு முன்வருகின்றன!

❊❊❊ அது மட்டுமா? காமன்வெல்த்தில் இந்தியா இருப்பதனால் யாருக்கு லாபம்? இந்தியாவுக்கா? அல்ல; பிரிட்டனுக்குத்தான்!

❊ அவ்வளவு பெரிய லாபத்துக்கு வழி வகுத்துக் கொடுப்பவர் யார்?

❊ இந்தியா காமன்வெல்த்தில் அங்கம் வகிக்க வேண்டுமென்று விடாப்பிடியாய்ப் பேசிக் கொண்டிருக்கும் பண்டிதர்!

❊ முன்பே தெரியும் நமக்கு, பிரிட்டன் ஒரு பெரிய வியாபாரி! அப்பேற்பட்ட வியாபாரிகள் தனக்கு லாபம் தேடித் தரும் ஒரு ஏஜண்டு நிலையிலே ஒரு நாட்டின் அமைச்சர் முன் வந்திருப்பதைப் பாராட்டாமல் இருப்பார்களா?

❊ புகழ் மாலை சூட்டுவார்கள்! இவரன்றோ மனிதர்—என்று பாராட்டிப் பேசுவார்கள்! கௌரவப் பட்டங்களை வாரி வழங்குவார்கள்!

❊ பண்டிதரைப் பற்றியும் நமக்குப் புரியும். அவர் ஒரு விளம்பரப் பிரியர். நெப்போலியன் எப்படி தனது உறவினர்களுக்கெல்லாம் பட்டங்களும், பதவிகளையும் வாரி இறைத்தானோ; அதைப் போலவே தனது உறவினர்களுக்கும் செய்து பார்க்கும் நோக்கம் கொண்டவர்!

❊ அத்தகையவரா வலிய வரும் விளம்பரங்களையும்; வரவேற்பையும் புகழ்மாலையையும் விட்டுக் கொடுப்பார்!

❊❊ பிரிட்டனின் தலைநகரம் இலண்டன்மா நகரத்தில் அவருக்கு ஒரு இடம் வேண்டும்.

❊❊ அதற்கு ஒரு படிதான்; பலிதான்—இந்தியா காமன் வெல்த்திலிருப்பது!

❊❊❊ இதைப் புரிந்து கொண்டதனால்தான் அழுத்தந் திருத்தமாகச் சொல்கிறோம்; இந்தியா காமன் வெல்த்திலிருந்து வெளியேற வேண்டுமென்று!

கொள்கை வளரும் கோபுரம் போல

சென்னை (7-வது வட்டம்)

24—11—56 சனி மாலை 6 மணிக்கு மூலகொத்தளம், பெரிய பாளையத்தம்மன் திடலில், டாக்டர் சத்தியவாணி முத்து அவர்கள் தலைமையில் நடைபெற இருக்கும் அழகிரி மன்றம் இரண்டாவது ஆண்டு விழாவில், அறிஞர் அண்ணா, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன், இ. ஆர். பாலசுந்தரம், துரை. செல்வராசன் — ஆகியோர் பேசுவர். தேர்தல் நிதி அளிக்கப்படும்.

சங்கரநயினார்கோயில்

25—11—56 ஞாயிறு இரவு மணிக்கு காந்தி திடலில் தோழர் சி. எஸ். பழனியப்பன் அவர்கள் தலைமையில், டாக்டர் சத்திய வாணிமுத்து, டபிள்யு. டி. துரைசாமி டி. ஆர். சுப்ரமணியம்—ஆகியோர் பேசுவர்.

சென்னை (5-வது வட்டம்)

25—11—56 ஞாயிறு மாலை 6 மணிக்கு வண்ணையம்பதி, கொருக்குப் பேட்டை, கிருட்டிணசாமிப் பிள்ளைத் தோட்டத்தில் தோழர் எஸ். எஸ். பி. லிங்கம் அவர்கள் தலைமையில், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்களுக்கு அளிக்கப்படும் பாராட்டுக் கூட்டத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் பேசுவார்கள்.

மகிழ்கிறோம்

கடலூர் இயக்கத் தோழர் இரா. பழனிச்சாமியின் துணைவியார் அகிலாண்டம் அம்மையாருக்குச் சென்ற 18—10—56 அன்று பிறந்த ஆண் மகவுக்கு நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'செங்குட்டுவன்' என்று பெயர் சூட்டினார்கள்—செய்தி அறிந்து மகிழ்கிறோம்.

O

வடபாதி மங்கலம் நமதியக்கத் தோழர் டி. செபாஸ்டின் அவர்களின் துணைவியார் சென்ற 20—10—56 அன்று ஒரு பெண் மகவுக்குத் தாயானார்கள் என்ற செய்தி அறிந்து மகிழ்கிறோம்.

புதிய முகவரி

மதுரை நகர, மாவட்ட தி. மு. கழகத்தின் புதிய முகவரி;

59, மேலக் கோபுரத் தெரு,

—மதுரை—

'முரசொலி'

இலங்கை,
உள் நாடு

ஆண்டு சந்தா	6-0-0
6-மாத சந்தா	3-8-0

ஆசிரியரும், அச்சிடுபவரும், இவ்விதழ் வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.